This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

சுராவின்



# தமிழ் உரைநூல்

## 12ஆம் வகுப்பு





இலவசம்
சுய மதிப்பீடு
பயிற்சி நூல்

**சிறப்பம்சங்கள்**

- புதிய பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், மொழித்திறன் பயிற்சிகள்(கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி மொழிபெயர்ப்பு, மொழியாக்கம்) ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 (அ.மா.வி.), **பிடிஏ 1 முதல் 6 மாதிரி வினாத்தாள்கள்**, காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, மார்ச் தேர்வு 2020, செப்டம்பர் தேர்வு 2020 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- செப்டம்பர் தேர்வு – 2020 விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

www.surabooks.com



This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

**2021-22 பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-81-8449-976-6**
**குறியீட்டு எண் : SG142**

**எழுதி வழங்கியவர்கள்**

**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA
**க. மதிமாறன்,** M.A., M.Ed, M.Phil, PGDCA
**கமலா**, M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
✆96001 75757 / 81242 01000 / 81243 01000,
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's Smart English & Tamil Translation
- Sura's Smart English Practice Workbook
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பன்னிரெண்டாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

www.surabooks.com





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி<br>**உயிரினும் ஓம்பப் படும்** | இளந்தமிழே! (செய்யுள்) | 1-44 |
| | | தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு நடராசன்(உரைநடை) | |
| | | தண்டியலங்காரம் (செய்யுள்) | |
| | | தம்பி நெல்லையப்பருக்கு (துணைப்பாடம்) | |
| | | தமிழாய் எழுதுவோம் (இலக்கணம்) | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**பெய்யெனப் பெய்யும் மழை** | பெருமழைக்காலம் (உரைநடை) | 45-77 |
| | | பிறகொரு நாள் கோடை (செய்யுள்) | |
| | | நெடுநல்வாடை (செய்யுள்) | |
| | | முதல்கல் (துணைப்பாடம்) | |
| | | நால்வகைப் பொருத்தங்கள் (இலக்கணம்) | |
| 3. | பண்பாடு<br>**சுற்றத்தார் கண்ணே உள** | தமிழர் குடும்ப முறை (உரைநடை) | 78-136 |
| | | விருந்தினர் இல்லம் (செய்யுள்) | |
| | | கம்பராமாயணம் (செய்யுள்) | |
| | | உரிமைத்தாகம் (துணைப்பாடம்) | |
| | | பொருள் மயக்கம் (இலக்கணம்) | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | |
| 4. | கல்வி<br>**செல்வத்துள் எல்லாம் தலை** | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் (உரைநடை) | 137-189 |
| | | இதில் வெற்றி பெற (செய்யுள்) | |
| | | இடையீடு (செய்யுள்) | |
| | | புறநானூறு (செய்யுள்) | |
| | | பாதுகாப்பாய் ஒரு பயணம் (துணைப்பாடம்) | |
| | | பா இயற்றப் பழகலாம் (இலக்கணம்) | |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம்<br>**நாடென்ப நாட்டின் தலை** | மதராசப்பட்டினம் (உரைநடை) | 190-233 |
| | | தெய்வமணிமாலை (செய்யுள்) | |
| | | தேவாரம் (செய்யுள்) | |
| | | அகநானூறு (செய்யுள்) | |
| | | தலைக்குளம் (துணைப்பாடம்) | |
| | | படிமம் (இலக்கணம்) | |




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
| --- | --- | --- | --- |
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>**சிறுகை அளாவிய கூழ்** | திரைமொழி **(உரைநடை)** | 234-308 |
| | | கவிதைகள் **(செய்யுள்)** | |
| | | சிலப்பதிகாரம் **(செய்யுள்)** | |
| | | மெய்ப்பாட்டியல் **(செய்யுள்)** | |
| | | நடிகர் திலகம் **(துணைப்பாடம்)** | |
| | | காப்பிய இலக்கணம் **(இலக்கணம்)** | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம்<br>**அருமை உடைய செயல்** | இலக்கியத்தில் மேலாண்மை **(உரைநடை)** | 309-359 |
| | | அதிசய மலர் **(செய்யுள்)** | |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு **(செய்யுள்)** | |
| | | புறநானூறு **(செய்யுள்)** | |
| | | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் **(துணைப்பாடம்)** | |
| | | தொன்மம் **(இலக்கணம்)** | |
| 8. | மனிதம், ஆளுமை<br>**எல்லா உயிரும் தொழும்** | நமது அடையாளங்களை மீட்டவர் **(உரைநடை)** | 360-410 |
| | | முகம் **(செய்யுள்)** | |
| | | இரட்சணிய யாத்திரிகம் **(செய்யுள்)** | |
| | | சிறுபாணாற்றுப்படை **(செய்யுள்)** | |
| | | கோடை மழை **(துணைப்பாடம்)** | |
| | | குறியீடு **(இலக்கணம்)** | |
| **மொழித்திறன் பயிற்சிகள்**<br>கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல், வல்லின மெய்களை இட்டு எழுதுதல், வல்லின மெய்களை நீக்கி எழுதுதல், எழுத்துப் பிழையைத் திருத்தி எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், மயங்கொலி, நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுதல், ஏற்ற வினா அமைத்து எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | 411-434 |
| **செப்டம்பர் தேர்வு - 2020 வினாக்கள் - விடைகள்** | | | 435-442 |






orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | PADI |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | ASIAD COLONY |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**

1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com    Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

## தன்னேர் இலாத தமிழ்

செப். 2020

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! - தண்டி

பா வகை : **நேரிசை வெண்பா**
அணி : **பொருள் வேற்றுமை அணி**

இயல் - 2

## நெடுநல்வாடை

அ.மா.வி 2019; பிடிஏ–3

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க - நக்கீரர்

பாவகை : **நேரிசை ஆசிரியப்பா**

இயல் - 3

## கம்பராமாயணம்

பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2020

2. 'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

பாவகை : **கலிவிருத்தம்**

9. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை. - கம்பர்

பா வகை : **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## திருக்குறள்

**இல்வாழ்க்கை**

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**செய்ந்நன்றி அறிதல்**

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது பிடிஏ–2
அன்றே மறப்பது நன்று.

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை பிடிஏ–4,6
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**வெஃகாமை**

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

**வெகுளாமை**

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019
தன்னையே கொல்லும் சினம்.

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**ஊழ்**

15. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் பிடிஏ–5
உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

**இயல் – 4**

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

– சுரதா

பாவகை : **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

மனப்பாடச் செய்யுள்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## புறநானூறு

அரையாண்டுத் தேர்வு 2019

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. – ஔவையார்

**பாவகை :** நேரிசை ஆசிரியப்பா

**திணை :** பாடாண்

**இயல் – 5**

## தெய்வமணிமாலை

பிடிஎ–2

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும். – இராமலிங்க அடிகள்

**பாவகை :** பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**இயல் – 6**

## சிலப்பதிகாரம்

பிடிஎ–5

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை. – இளங்கோவடிகள்

**பாவகை :** ஆசிரியப்பா

## திருக்குறள்

**அறிவு உடைமை**

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

பிடிஎ–1, 3; அரையாண்டுத் தேர்வு 2019

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

செப். 2020

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

**சிற்றினம் சேராமை**

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

**வினைத்திட்பம்**

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

மனப்பாடச் செய்யுள்

www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores


மார்ச் 2020

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

**தூது**

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

**உட்பகை**

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

**சூது**

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். – திருவள்ளுவர்

மனப்பாடச் செய்யுள்

**இயல் - 7**

## புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்; – பிசிராந்தையார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

**இயல் - 8**

## இரட்சணிய யாத்திரிகம்

### இறைமகனின் எளியநிலை

பிடிஏ–4, 6

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. – எச்.ஏ. கிருட்டிணனார்

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## சிறுபாணாற்றுப்படை

**இவர்களோடு நல்லியக்கோடன்**

................. என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள். – நல்லூர் நத்தத்தனார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

★★★


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



இயல் 1

# இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம் கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியம் |
| புனைப் பெயர் | : | சிற்பி |
| பெற்றோர் | : | பொன்னுசாமி – கண்டியம்மாள் |
| பிறந்த ஊர் | : | ஆத்துப் பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்) |
| பிறப்பு | : | 1936, ஜூலை 29 |
| பணி | : | முதலில் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர். இரண்டாவதாக கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர். |
| படைப்புகள் | : | **கவிதை நூல்கள்** ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி, மௌன மயக்கங்கள், நீலக்குருவி போன்றவை. மேலும் கவிதைநாடகம், சிறுவர் நூல்கள், புதினங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றவற்றைப் படைத்துள்ளார். |
| சிறப்பு | : | கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் என்று பன்முகச் சிறப்பு கொண்டவர்.<br>சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக உள்ளார்.<br>இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார். |
| விருதுகள் | : | சாகித்திய அகாதெமி விருது (2001–ஆம் ஆண்டு, அக்னி சாட்சி – மொழிபெயர்ப்பு நூல்)<br>சாகித்திய அகாதெமி விருது (2002–ஆம் ஆண்டு, ஒரு கிராமத்து நதி – கவிதை நூல்)<br>தமிழக அரசு விருது (1982–ஆம் ஆண்டு, மௌன மயக்கங்கள் – கவிதை நூல்)<br>தமிழக அரசு விருது (1998–ஆம் ஆண்டு, பூஜ்யங்களின் சங்கிலி – கவிதை நூல்)<br>தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009–ஆம் ஆண்டு, சிறந்த படைப்பாளி)<br>இவை தவிர்த்து மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார். |
| சிற்பி அறக்கட்டளை | : | 1996–இல் இவரால் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. |

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், இந்தி, மராத்தி

## பாடப்பகுதி

சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **நிலவுப்பூ** என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

### இளந்தமிழே!



**செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!**
**தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்**
**தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்**
**விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்**
**வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட**
**எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்**
**ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!**



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores





## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| செம்பரிதி | – செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் (அல்லது) சூரியன் |
| மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் | – உயர்ந்த மலையின் பின்சென்று மறைவான் |
| வானமெல்லாம் | – ஆகாயம் எங்கும் |
| செந்நிறத்துப் பூக்காடாம் | – சிவந்த நிறமுடைய பூக்கள் அடர்ந்து பரவிக் கிடக்கும் |
| தம்கைகள் அதனைப்போல சிவந்து | – செந்நிறப் பூக்கள் செறிந்துள்ள காட்சியைப் போல சிவப்பாகும் அளவிற்கு |
| நோகத் தாம் உழைக்கும் தொழிலாளர் | – கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் |
| விம்முகின்ற தோள்மீதில் | – பருத்துள்ள தோள்களின் மேல் |
| வியர்வை வெள்ளம் | – அதிகளவிலான வியர்வைத் துளிகள் |
| முத்து முத்தாய் வீற்றிருக்கும் | – முத்துகள் போல இருக்கும் |
| எம் அருமைச் செந்தமிழே | – எங்களது அருமையான செந்தமிழ் மொழியே |
| அவையெல்லாம் வியந்துபாட | – அவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு |
| உன்னை அல்லால் | – உன்னைத் தவிர |
| ஏற்ற துணை வேறு உண்டோ | – பொருத்தமான வேறு துணை உண்டோ |
| இயம்பிடாயே | – கூறுவாயாக |

## பொருளுரை

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைப் பொழுதில் உயர்ந்த மலைகளின் பின்சென்று மறைவான். அப்போது ஆகாயம் எங்கும் செந்நிறப் பூக்களை அடர்த்தியாக தூவியது போன்று காட்சியளிக்கும். அதைப்போல, தம் கைகள் சிவந்து போகும் அளவிற்கு கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் பருத்து விளங்கும் தோள்களின் மீது வியர்வைத் துளிகள் முத்து முத்தாகக் காணப்படும். இவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு செந்தமிழே உன்னைத் தவிர பொருத்தமான வேறு துணை உண்டோ? கூறுவாயாக.

## விரிவான விளக்கம்

மாலைப் பொழுதில் சூரியன் மறையும் நேரத்தில் வானம் சிவந்து காணப்படுவது இயற்கையான ஒரு நிகழ்வு. அக்காட்சியானது சிவந்த பூக்களை சிதறிவிட்டது போல் காணப்படுகிறது என்று ஆசிரியர் உவமைநயத்துடன் கூறியுள்ளார். வானம் சிவந்திருப்பதை தொழிலாளியின் சிவந்த கைகளுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ளார். தொழிலாளியின் தோள்மீது வியர்வை முத்துமுத்தாய் காணப்படுவதை 'வியர்வை வெள்ளம்' என்று உருவகப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட காட்சிகளை எல்லாம் புகழ்ந்து உரைப்பதற்கு தமிழ்மொழியைத் தவிர, வேறு மொழிகள் தனக்குப் பயன்படாது என்பதை குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

உவமைநயம், உருவகம் போன்றவற்றை அமைத்துப் பாடுவதற்கு செந்தமிழ் மொழியே தனக்கு துணையாகும் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள் :

| | |
|---|---|
| 1. பரிதி – சூரியன் | 4. ஏற்ற துணை – பொருத்தமான துணை |
| 2. விம்முகின்ற தோள் – பருத்திருக்கின்ற தோள் (பெரிய தோள்கள்) | 5. இயம்புதல் – கூறுதல் |
| 3. வியந்து – புகழ்ந்து | |

### பிரித்தெழுதுக:

| | |
|---|---|
| 1. செம்பரிதி – செம்மை + பரிதி | 6. அவையெல்லாம் – அவை + எல்லாம் |
| 2. செந்நிறம் – செம்மை + நிறம்தோள்கள்) | 7. செந்தமிழே – செம்மை + தமிழே |
| 3. பூக்காடு – பூ + காடு | 8. உன்னையல்லால் – உன்னை + அல்லால் |
| 4. வானமெல்லாம் – வானம் + எல்லாம் | 9. வேறுண்டோ – வேறு + உண்டோ |
| 5. தாமுழைக்கும் – தாம் + உழைக்கும் | |

### இலக்கணக்குறிப்பு :

| | |
|---|---|
| 1. செம்பரிதி, செந்நிறம், செந்தமிழ் – பண்புத்தொகைகள் | 5. விம்முகின்ற – பெயரெச்சம் |
| 2. வியர்வை வெள்ளம், பூக்காடு – உருவகங்கள் | |
| 3. சிவந்து, வியந்து – வினையெச்சங்கள் | |
| 4. முத்து முத்தாய் – அடுக்குத்தொடர் காலாண்டுத் தேர்வு 2019 | |



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



பகுபத உறுப்பிலக்கணம் :

| | |
|---|---|
| **சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்**<br>சாய் – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | **வியந்து – விய + த்(ந்) + த் + உ** பிடிஏ–3<br>விய – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **விம்முகின்ற – விம்மு + கின்று + அ** காலாண்டுத் தேர்வு 2019<br>விம்மு – பகுதி<br>கின்று – நிகழ்கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | |

புணர்ச்சி விதி :

**பண்புப்பெயர் புணர்ச்சி**

1. **செம்பரிதி** – செம்மை + பரிதி  அரையாண்டுத் தேர்வு 2019
   **விதிகள்:** செம்மை + பரிதி
   (i) **'ஈறு போதல்'** விதிப்படி 'மை' விகுதி கெட்டு **'செம் + பரிதி'** என்றானது.
   (ii) **'செம் + பரிதி'** என்பது இயல்பாகப் புணர்ந்து **'செம்பரிதி'** என்றானது.
2. **செந்நிறம்** – செம்மை + நிறம்
   **விதிகள்:** செம்மை + நிறம்
   (i) **'ஈறு போதல்'** விதிப்படி 'மை' விகுதி கெட்டு **'செம் + நிறம்'** என்றானது.
   (ii) **'முன்னின்ற மெய் திரிதல்'** என்ற விதிப்படி **'செந்நிறம்'** என்றானது.
3. **செந்தமிழே** – செம்மை + தமிழே  மார்ச் 2020
   **விதிகள்:** செம்மை + தமிழே
   (i) **'ஈறு போதல்'** விதிப்படி 'மை' விகுதி கெட்டு **'செம் + தமிழே'** என்றானது.
   (ii) **'முன்னின்ற மெய் திரிதல்'** என்ற விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான 'த' விற்கு இனமான 'ந்' என்ற எழுத்து தோன்றி **'செந்தமிழே'** என்றானது.

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

1. **வானமெல்லாம்** – வானம் + எல்லாம்  பிடிஏ–4; செப். 2020
   **விதி :** வானம் + எல்லாம் – மெய்யீற்றின் முன்(ம்) உயிர் வந்ததால் (எ)
   **'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி **'வானமெல்லாம்'** என்றானது.
2. **தாமுழைக்கும்** – தாம் + உழைக்கும்
   **விதி :** தாம் + உழைக்கும் – மெய்யீற்றின் (ம்) முன் உயிர் வந்ததால் (உ) **'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி **'தாமுழைக்கும்'** என்றானது.

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **உன்னையல்லால்** – உன்னை + அல்லால்
   **விதிகள்:** உன்னை + அல்லால்
   (i) **'இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி 'உன்னை + ய் + அல்லால்' என்றானது.
   (ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி, **'உன்னையல்லால்'** என்றானது.
2. **அவையெல்லாம்** – அவை + எல்லாம்.
   **விதிகள்:** அவை + எல்லாம்
   (i) நிலைமொழியின் ஈற்றில் உயிரும் (வ் + ஐ) வருமொழி முதலில் உயிரும் (எ) வந்ததால் **'இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி இரண்டையும் இணைக்க இடையில் யகரம் தோன்றி **'அவை + ய் + எல்லாம்'** என்றானது.
   (ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'அவையெல்லாம்'** என்றானது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**குற்றியலுகரப் புணர்ச்சி**

1. **வீற்றிருக்கும்** – வீற்று + இருக்கும்

   **விதிகள்:** வீற்று + இருக்கும்

   (i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (இ) வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு 'வீற்ற் + இருக்கும்' என்றானது.

   (ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வீற்றிருக்கும்'** என்றானது.

2. **வேறுண்டோ** – வேறு + உண்டோ

   **விதிகள்:** வேறு + உண்டோ

   (i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'வேற்ற் + உண்டோ' என்றானது.

   (ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வேறுண்டோ'** என்றானது.

**பாடல்**

**மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்**
**முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்**
**பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!**
**மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!**
**கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்**
**குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!**

**தெரிந்து தெளிவோம்**

1. **முதல் ஏழு வள்ளல்கள்:** குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி
2. **இடையெழு வள்ளல்கள்:** அக்ரூரன், அந்திமான், சந்திமான், சந்தன், கர்ணன், சிசுபாலன், தந்திவக்கிரன்
3. **கடையெழு வள்ளல்கள்:** பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, பேகன்



**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் | – உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய் |
| எங்கள் முத்தமிழே நீயுள்ளாய் | – இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழாக நீ இருக்கின்றாய் |
| பாண்டியரின் சங்கத்தில் | – பாண்டிய மன்னர்களின் தமிழ்ச் சங்கத்தின் |
| கொலுவிருந்து | – அரியணையில் அமர்ந்திருந்தாய் |
| பாரி முதல் வள்ளல்களை | – பாரி முதலான கொடை வள்ளல்கள் பலரை |
| ஈன்று தந்தாய் | – உன் புதல்வர்களாகப் பெற்றுக் கொடுத்துள்ளாய் |
| மீண்டும் அந்தப் பழமை நலம் | – அத்தகைய பொற்காலம் மீண்டும் |
| புதுக்குதற்கு மெய்சிலிர்க்க | – அமைவதற்கு உடல்சிலிர்க்க |
| தமிழ்க்குயிலே கூவி வா, வா! | – தமிழாகிய குயிலே இன்னிசை எழுப்பி வருவாயாக |
| கூண்டு அதனை உடைத்து எழுந்த | – தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை உடைத்துவிட்டு வெளியே வரும் |
| சிங்கம் போல | – சிங்கத்தைப் போன்று |
| குளிர்பொதிகை | – குளிர்ச்சியான பொதிகை மலையைப் போன்ற |
| தென்தமிழே சீறி வா, வா | – தென்னகத்தின் தமிழ்மொழியே, வீரத்துடன் வருவாயாக. |

**பொருளுரை**

முத்தமிழே! எங்கள் உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய். பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச்சங்கத்தின் அரியணையில் வீற்றிருந்தாய். பாரி முதலான வள்ளல்கள் பலரைப் பெற்றுத் தந்துள்ளாய்! ஈகைக் குணம் நிறைந்திருந்த மாந்தர்கள் வாழ்ந்திருந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு எங்கள் உடல் சிலிர்க்கும்படியாக தமிழாகிய குயிலே இன்னிசை பாடி வருவாயாக! தென்னகத்தின் குளிர்ச்சி பொருந்திய தமிழே, சிங்கமானது கூண்டை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளியே வருவது போல வருவாயாக!

**விரிவான விளக்கம்**

'கவிதை வெறிக்கு உணவாய்' என்ற தொடரில் உணவு என்பதை உயிர் எனக் கொள்ள வேண்டும். ஒரு கவிதை பொருளற்று இருந்தால் அதற்கு மதிப்பில்லை. ஒருவரின் உயிரைக் காப்பது உணவு. கவிதை ஆற்றலை வெளிப்படுத்தும் போது அதில் **உயிர்ப்பு** இருக்க வேண்டும் என்பதால் 'உணவாய்' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



முதல் ஏழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் போன்று எண்ணற்ற வள்ளல்களுக்கு தாயாக விளங்கிய தமிழே, குயிலின் இன்னிசை போல நீ பாடி வரும் போது மீண்டும் அந்தத் தொன்மையான காலம் தோன்ற வேண்டும்.

குளிர்ச்சியான பொதிகை மலையில் (குற்றால மலை) தோன்றிய தென் தமிழே, கூண்டை உடைத்துக் கொண்டு சிங்கம் வீரத்துடன் வெளியே வருவது போல, உன் வளர்ச்சிக்கு தடைகளாய் அமைந்தவற்றை எல்லாம் தகர்த்து எறிந்து விட்டு வருவாயாக!

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. மூண்டு வரும் – பொங்கிப் பெருகி வரும் | 3. ஈன்று – பெற்று |
| 2. கொலுவிருத்தல் – அரியணையில் வீற்றிருத்தல் | |

**பிரித்தெழுதுக:**

| | |
|---|---|
| 1. வெறிக்குணவாய் – வெறிக்கு + உணவாய் | 6. கூண்டதனை – கூண்டு + அதனை |
| 2. முத்தமிழ் – மூன்று + தமிழ் | 7. தென்தமிழே – தெற்கு + தமிழே |
| 3. நீயுள்ளாய் – நீ + உள்ளாய் | 8. மீண்டுமந்த – மீண்டும் + அந்த |
| 4. கொலுவிருந்தாய் – கொலு + இருந்தாய் | 9. உடைத்தெழுந்த – உடைத்து + எழுந்த |
| 5. தமிழ்க்குயிலே – தமிழ் + குயிலே | |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. முத்தமிழ் – பண்புத்தொகை | 4. எழுந்த – பெயரெச்சம் |
| 2. தமிழ்க்குயில் – உருவகம் | 5. குளிர்பொதிகை – வினைத்தொகை |
| 3. ஈன்று, சீறி, உடைத்து – வினையெச்சங்கள் | |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| | |
|---|---|
| **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**<br>இரு – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆய் – முன்னிலை ஒருமை விகுதி | **உடைத்து – உடை + த் + த் + உ**<br>உடை – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **ஈன்று – ஈன் + ற் + உ**<br>ஈன் – பகுதி<br>ற் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **எழுந்த – எழு + த்(ந்) + த் + அ**<br>எழு – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| **தந்தாய் – தா(த) + த்(ந்) + த் + ஆய்**<br>தா – பகுதி 'த' எனக் குறுகியது விகாரம்<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | **சீறி – சீறு + இ**<br>சீறு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி |

**புணர்ச்சி விதி :**

**குற்றியலுகரப் புணர்ச்சி**

1. **வெறிக்குணவாய்** – வெறிக்கு + உணவாய்
   **விதிகள்:** வெறிக்கு + உணவாய்
   (i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'வெறிக்க் + உணவாய்' என்றானது.
   (ii) **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'வெறிக்குணவாய்'** என்றானது.
2. **கூண்டதனை** – கூண்டு + அதனை
   **விதிகள்:** கூண்டு + அதனை
   (i) **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'கூண்ட் + அதனை' என்றானது.
   (ii) **'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து **'கூண்டதனை'** என்றானது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



3. உடைத்தெழுந்த – உடைத்து + எழுந்த

**விதிகள்:** உடைத்து + எழுந்த

(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்ற விதிப்படி 'உடைத் + எழுந்த' என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து '**உடைத்தெழுந்த'** என்றானது.

### எண்ணுப்பெயர் புணர்ச்சி

1. முத்தமிழ் – மூன்று + தமிழ்

இது **எண்ணுப்பெயர் புணர்ச்சி** ஆகும்.

**விதிகள்:** மூன்று + தமிழ்

(i) '**மூன்று ஆறு ஏழ் குறுகும்'** என்ற விதிப்படி எண்ணுப் பெயரின் முதல் எழுத்து குறுகி '**முன்று + தமிழ்'** என்றானது.

(ii) '**ஈற்று உயிர்மெய்யும் ஏகும்'** என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய் கெட்டு '**முன் + தமிழ்'** என்றானது.

(iii) '**மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்'** என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்று 'ன'கரம் வருமொழி முதல் மெய் எழுத்தாய் திரிந்து '**முத் + தமிழ் – முத்தமிழ்'** என்றானது.

### உடம்படுமெய் புணர்ச்சி

1. நீயுள்ளாய் – நீ + உள்ளாய்

**விதிகள்:** நீ + உள்ளாய்

(i) '**இ ஈ ஐ வழி யவ்வும்'** என்ற விதிப்படி உடம்படு மெய்யான யகரம் தோன்றி 'நீ+ ய் + உள்ளாய்' என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து '**நீயுள்ளாய்'** என்றானது.

2. கொலுவிருந்தாய் – கொலு + இருந்தாய்

**விதிகள்:** கொலு + இருந்தாய்

(i) '**இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்'** என்ற விதிப்படி 'கொலு+ வ் +இருந்தாய்' என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்ற விதிப்படி புணர்ந்து '**கொலுவிருந்தாய்'** என்றானது.



### இயல்பீறு புணர்ச்சி

1. தமிழ்க்குயில் – தமிழ் + குயில்

**விதி:** தமிழ் + குயில் – '**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'** என்ற விதிப்படி 'தமிழ் + க் + குயில்' என்று மாற்றம் பெற்று **தமிழ் குயில்** என்றானது.

### திசைப்பெயர் புணர்ச்சி

1. தென்தமிழே – தெற்கு + தமிழே

**விதிகள்:** தெற்கு + தமிழே

(i) '**திசையொடு பிறவும் சேரின் நிலையீற்று உயிர்மெய் நீங்கலும்'** என்ற விதிப்படி 'தெற் + தமிழே' என்றானது.

(ii) '**றகரம் னலவாகத் திரிதலும்'** என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று 'ற'கரம் 'ன'கரமாய்த் திரிந்து 'தென்+ தமிழே' என்று மாற்றம் பெற்று '**தென் தமிழே'** என்றானது.

## கற்பவை கற்றபின்

1. **தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! இன்றைய கலந்துரையாடலில் எந்தப் பொருள் குறித்து உரையாடப் போகிறீர்கள்?

**மாணவர்கள்** : ஐயா! நமது பாடப்புத்தகங்களில் முதலில் நாட்டுப்பண் அடுத்து தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ளன. அது குறித்து இன்று உரையாடலாம் என முடிவு செய்துள்ளோம்.

**ஆசிரியர்** : மிகவும் நன்று! எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக முடிப்பதற்கு இறையருளை வேண்டுவது தமிழரின் மரபாகும்.



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**கயல்விழி** : ஆம் ஐயா! அதனால்தான் திருக்குறளில் முதலில் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

**இளங்குமரன்** : அப்படியென்றால் பாடப்புத்தகத்தில் முதலில் நாட்டுப்பண்தானே அமைந்துள்ளது. இறைவாழ்த்து வரவில்லையே!

**ஆசிரியர்** : நமது இந்தியா மதசார்பற்ற நாடு. அதனால்தான் தேசத்தை முதன்மைப்படுத்தி நாட்டுப்பண்ணும், நமது மொழி வாழ்த்துப் பாடல் இரண்டாவதாகவும் அமைந்துள்ளன.

**தமிழ்ச் செல்வன்** : ஒவ்வொருவரும் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடன் இருக்க வேண்டும். தாய்மொழி நமது உயிருக்கு நிகரானது. நம் தாய்மொழியின் தொன்மை, சிறப்பு, பெருமைகள் போன்ற யாவற்றையும் அறிந்தவரால்தான் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்க முடியும்.

**ஆசிரியர்** : மிக நன்றாகக் கூறினாய்! மகாத்மா காந்தியடிகள் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடையவர். தாய்மொழியில் கற்பதே சிறந்தது என்றும் கூறியுள்ளார். தாய்மொழிப் பற்று இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் பாடநூல்களில் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுகின்றது.

**கயல்விழி** : மொழி வாழ்த்துப் பாடலின் மூலமாக நமது மொழியின் சிறப்புகளையும் காலம் கடந்து அழியாமல் நிற்கின்ற அதன் நிலைப்புத் தன்மையையும் அறிய முடிகிறது.

**இளங்குமரன்** : அதனால்தான், தான் காணும் காட்சிகளைப் புகழ்ந்துபாட தமிழ் மொழியைத் தவிர ஏற்ற துணை வேறில்லை என்று சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ளார்.

**ஆசிரியர்** : நன்று! நன்று! தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம் பெறுவதன் நோக்கத்தை இப்போது நன்கு அறிந்திருப்பீர்கள் எனக் கருதுகிறேன்.

**மாணவர்கள்** : ஆம் ஐயா! தமிழ் மொழியின் தன்னிகரில்லாத சிறப்புகளை எடுத்துக் கூறும் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுவது பெருமைக்கு உரியது. தாய்மொழியை வணங்குவோம்! அதன் பெருமைகளை தரணியெங்கும் எடுத்துச் செல்வோம்! நன்றி ஐயா!

**ஆசிரியர்** : நன்றி மாணவர்களே!

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்** பிடிஏ–4

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

**விடை: ஆ) ஒரு கிராமத்து நதி**

**2. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?** பிடிஏ–6

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி **விடை: அ) பாடி**

**3. சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ......... துறைத் தலைவராகப் பணியாற்றினார்.** காலாண்டுத் தேர்வு 2019

அ) தமிழ் ஆ) வரலாறு இ) ஆங்கிலம் ஈ) பொருளாதாரம் **விடை: அ) தமிழ்**

**4. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் :** மார்ச் 2020

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம் **விடை: ஆ) நிலவுப் பூ**

### குறுவினா

**1. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்'' – யார், யாரைப் பற்றி கூறியது?** பிடிஏ–5

சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்தாயைப் பற்றிக்கூறியது.

### சிறுவினா

**1. சிற்பி பாலசுப்பிரமணியம் – குறிப்பு வரைக.** பிடிஏ–1

**சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிய குறிப்புகள்:**

**ஆற்றியபணி** : பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.

**ஆற்றுகின்ற பணி** : சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர்.

**சிறப்பு** : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்.

**விருது** : 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலிற்காகவும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**படைப்புகள் :**

| | |
|---|---|
| **கவிதை நூல்கள்** | நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலியவை |
| **உரைநடை நூல்கள்** | இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் |
| **மொழிபெயர்ப்பு நூல்கள்** | மலையாளக் கவிதைகள் மற்றும் புதினங்களை மொழிபெயர்த்துள்ளார். |

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் என்பவர் ........**
(i) கவிஞர் (ii) பேராசிரியர் (iii) மொழிபெயர்ப்பாளர் (iv) இதழாசிரியர்
அ) (i) மட்டும் (ii) சரியானவை ஆ) (i) மட்டும் (iii) சரியானவை
இ) (iii) மட்டும் (iv) சரியானவை ஈ) அனைத்தும் சரியானவை
**விடை: ஈ) அனைத்தும் சரியானவை**

2. **சிற்பி பாலசுப்பிரமணிய ......... பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.**
அ) சென்னை ஆ) பாரதியார் இ) காமராஜர் ஈ) தஞ்சை **விடை: ஆ) பாரதியார்**

3. **சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்?**
அ) ஒரு முறை ஆ) இரண்டு முறை
இ) மூன்று முறை ஈ) நான்கு முறை **விடை: ஆ) இரண்டு முறை**

4. **"எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால் ஏற்ற துணை வேறுண்டோ" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள கவிதை நூல் ......... .**
அ) பூஜ்யங்களின் சங்கிலி ஆ) ஒளிப்பறவை
இ) நிலவுப் பூ ஈ) சர்ப்பயாகம் **விடை: இ) நிலவுப் பூ**

5. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'அலையும் சுவடும்' என்பது ......... நூலாகும்.**
அ) கவிதை ஆ) மொழிபெயர்ப்பு இ) உரைநடை ஈ) புதினம் **விடை: இ) உரைநடை**

6. **கருத்து 1: செந்நிறப் பூக்கள் செறிந்திருந்த வானம் போல் தொழிலாளர்களின் கை சிவந்திருந்தது.**
**கருத்து 2: தொழிலாளர்களின் முகத்தின் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.**
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) 1 மற்றும் 2 சரியானவை ஈ) 1 மற்றும் 2 தவறானவை **விடை: அ) 1 மட்டும் சரி**
**சரியான கருத்து:** தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.

7. **செம்பரிதி ......... தலையைச் சாய்ப்பான்.**
அ) வெண்மேகத்தில் ஆ) மலைமேட்டில்
இ) கடலில் ஈ) கருமேகத்தில் **விடை: ஆ) மலைமேட்டில்**

8. **பொருத்துக.**
அ) செந்தமிழ் - 1. குளிர் பொதிகை
ஆ) முத்தமிழ் - 2. பழமை நலம்
இ) தமிழ்க்குயில் - 3. மூண்டுவரும் கவிதை
ஈ) தென் தமிழ் - 4. ஏற்ற துணை
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 3, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **விடை: அ) 4, 3, 2, 1**

9. **பொருத்துக.**
அ) செம்பரிதி - 1. உருவகம்
ஆ) வியர்வை வெள்ளம் - 2. பண்புத்தொகை
இ) சிவந்து - 3. பெயரெச்சம்
ஈ) எழுந்த - 4. வினையெச்சம்
அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **விடை: அ) 2, 1, 4, 3**





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



10. வானமெல்லாம் நிறைந்திருந்த பூக்காட்டின் நிறம் ......... .

அ) வெண்மை ஆ) மஞ்சள் இ) சிவப்பு ஈ) நீலம் **விடை: இ) சிவப்பு**

11. செம்பரிதி என்பது ......... விதி ஆகும்.

அ) உடம்படுமெய் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி
இ) பண்புப்பெயர் புணர்ச்சி ஈ) இயல்பீறு புணர்ச்சி **விடை: இ) பண்புப்பெயர் புணர்ச்சி**

12. விம்மு + கின்று + அ என்பதில் 'கின்று' என்பது ......... .

அ) இறந்தகால இடைநிலை ஆ) நிகழ்கால இடைநிலை
இ) எதிர்கால இடைநிலை ஈ) எதிர்மறை இடைநிலை **விடை: ஆ) நிகழ்கால இடைநிலை**

13. "விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய் வீற்றிருக்கும்" இவ்வடியில் பயின்று வந்துள்ள அணி ........

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) எடுத்துக் காட்டு உவமை அணி ஈ) உயர்வு நவிற்சி அணி **விடை: அ) உவமை அணி**

## குறுவினா

1. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?**

**சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிகள்:** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

2. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடைநூல்கள் யாவை?**

**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடைநூல்கள்:**

(i) இலக்கியச் சிந்தனைகள், (ii) மலையாளக் கவிதை, (iii) அலையும் சுவடும்.

3. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போல் சிவந்திருப்பதாக சிற்பி கூறுகிறார்?**

கதிரவன் மாலைநேரத்தில் மறையும் போது வானம் முழுவதும் செந்நிறப் பூக்கள் செறிந்து காணப்படுவது போல் சிவந்து இருக்கும். அதனைப் போல் தொழிலாளர்களின் கைகள் சிவந்திருப்பதாக சிற்பி கூறுகிறார்.

4. **'முத்தமிழே நீயுள்ளாய்' என்று எதற்காகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**

"உள்ளத்தில் பொங்கி பெருகி வரும் கவிதை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழாக எங்கள் உயிராக இருக்கிறாய்" என்று சிற்பி கூறுகிறார்.

5. **தமிழ்க்குயிலை இன்னிசைப் பாடிவருமாறு கவிஞர் சிற்பி ஏன் அழைக்கிறார்?**

"பாரி முதலான வள்ளல்கள் பலரை ஈன்றெடுத்த தமிழ்த்தாயே! அவர்கள் வாழ்ந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு உடல் சிலிர்க்குமாறு தமிழ்க்குயிலாக மாறி இன்னிசைப் பாடி வருவாயாக!" என்று கவிஞர் சிற்பி அழைக்கிறார்.

6. **கவிஞர் தென்தமிழை எவ்வாறு வரச்சொல்கிறார்?**

"சிங்கமானது, தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளிவருவது போல தென்தமிழே நீ வருவாயாக!" என்று கவிஞர் கூறுகிறார்.

7. **'தென் தமிழே! சீறி வா, வா!' என்பதில் கூறப்பட்ட உவமை நயம் யாது?**

சிங்கம் கூண்டினை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளிவருவது உவமையாகும். இதே போல், குளிர் பொதிகையில் வளர்ந்த தென்தமிழ் தன்னுடைய வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை நீக்கி விட்டு வீறு கொண்டு எழுந்து வரவேண்டும் என்பது உவமேயம்.

8. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சிலவற்றை எழுதுக.**

**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சில:** நிலவுப் பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்ஜியங்களின் சங்கிலி.

9. **'செந்தமிழே' என்ற சொல்லின் புணர்ச்சி விதியைக் கூறுக.**

இது பண்புப்பெயர் புணர்ச்சி ஆகும்.

**விதிகள்:** செம்மை + தமிழே

(i) '**ஈறு போதல்**' விதிப்படி 'மை' விகுதி கெட்டு '**செம் + தமிழே**' என்றானது.

(ii) '**முன்னின்ற மெய் திரிதல்**' என்ற விதிப்படி செந் + தமிழ் என்று மாற்றமடைந்து 'செந்தமிழே' என்று புணர்ந்தது.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**10. 'தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம் விம்முகின்ற தோள் மீதில் முத்து முத்தாய்' என்ற அடிகளில் காணப்படும் அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்புகளை எடுத்து எழுதுக.**

வியர்வை வெள்ளம் – உருவகம்
விம்முகின்ற – பெயரெச்சம்
முத்து முத்தாய் – அடுக்குத் தொடர்

**சிறுவினா**

**1. "பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்"– இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : இப்பாடலடிகள் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'நிலவுப் பூ' என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்** : பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச் சங்கத்தில் அரியணையில் வீற்றிருந்த தமிழன்னையே! பாரி முதலான வள்ளல்கள் பலரை இந்த உலகிற்குக் கொடுத்துள்ளாய்!

**விளக்கம்** : பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் அமைத்து தமிழ்மொழியை வளர்த்தனர். அவர்களின் சங்கத்தில் அரசியாக கொலுவிருந்த தமிழன்னையே! புலவர்களையும் வறியவர்களையும் பேணிக் காத்த, கொடைப் பண்புகள் மிகுந்திருந்த பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்தாய்!

☆ ☆ ☆

உயிரினும் ஓம்பப் படும் – மொழி

# இயல் 1 தமிழ்மொழியின் நடை அழகியல்

– தி.சு நடராசன் உரைநடை உலகம்

**பாடப்பகுதி**

தி.சு. நடராசன் எழுதிய 'தமிழ் அழகியல்' என்ற நூலிலிருந்து சில பகுதிகள் தொகுக்கப்பட்டு பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

**பாடச் சுருக்கம்** **மொழிசார் கலை**

**தொல்காப்பியம்:**

(i) இந்நூல் அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற நூலாகும்.
(ii) இலக்கியத்தையும் மொழியையும் ஒன்றாகக் கூறுகின்ற இலக்கண நூலாகும்.
(iii) எழுத்துகளுடன் செய்யுள் வழக்கு பற்றியும் கூறுகிறது.
(iv) எழுத்து, சொல் இவற்றுடன் செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கொண்டுள்ளது.
(v) ஏனைய கலைகளில் இருந்து கவிதைக் கலையை வேறுபடுத்தியுள்ளது.
(vi) கிரேக்கம், வடமொழி முதலிய பிறமொழிகளை விட தமிழ், மொழிசார் கலையை நன்றாகப் புரிந்து வைத்துள்ளது.
(vii) பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிச் சூழல்கள், பேசும்போதும், கேட்கும் போதுமான தனிச் சூழல்கள் ஆகியவை மட்டுமல்லாமல் வரலாறு முழுமையும் மொழி பரவியுள்ளது. இதனையே இலக்கியம் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றிக் கொண்டுள்ளது.
(viii) **உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி** முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுகின்றன.
(ix) இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளைத் தனக்குரியதாக மாற்றிக் கொள்வதால், இலக்கியத்திற்கு சிறப்புத் தன்மை ஏற்படுகிறது. இந்தத் தன்மை **கவிதைத்தனம்** அல்லது **இலக்கியத்தனம்** எனப்படுகிறது. இதனால் மொழிசார் பொருள், மொழிசார் கலையாக மாறிவிடுகிறது.

பிடிஏ–3; மார்ச் 2020

**கலை முழுமை : 'கலை முழுமை' – என்பதை விளக்குக.**

(i) **அறம், பொருள், இன்பம்** ஆகிய மூன்று பயன்களும் இருக்கும்படியாக இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது **கலை முழுமை** எனப்படுகிறது.


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores


(ii) சங்க இலக்கியத்தில் அகத்திணையும் புறத்திணையும் பாடற்பொருளாக அமைந்துள்ளன. **தொல்காப்பியம்** அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் கருத்துகளோடு இணைத்துள்ளது. தொல்காப்பியத்தில் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் குறிப்பிடப்பட்டு, அதனுடன் அறவியல் கருத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன.

"அந்நில மருங்கின் அறமுதலாகிய
**மும்முதற் பொருட்கும்** உரிய என்ப" (தொல். செய்யுளியல்)

மும்முதற் பொருள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமாகும்.

**தமிழ் அழகியலின் நெடும்பரப்பு :**

சமூக, பண்பாடு மரபுக்கேற்றவாறு கலைப்படைப்பு மற்றும் அழகியல் நெறியை **பண்பாட்டின் இலச்சினையாகக்** கொண்டுள்ள தமிழரின் மரபே தமிழ் அழகியலின் நெடும்பரப்பாகும்.

**நடையியல் :**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை,

(i) ஒலிக் கோலங்கள் (ii) சொற்புலம் (iii) தொடரியல் போக்குகள்

**கவிதையின் உந்து சக்திகள் :**

(i) மொழியின் சிறப்பான கூறுகள் (ii) அவற்றைக் கையாளுகிற வகைகள்

கவிதையின் இயங்காற்றல்தான் நடையியல் என்று தொல்காப்பியமும் பிற இலக்கணங்களும் கூறுகின்றன.

**தொல்காப்பியம் 'நடை' என்ற சொல்லைக் கையாண்டுள்ள விதம்**

| | |
|---|---|
| 'நடைபெற்றியலும்' | (கிளவியாக்கம் – 26) |
| 'நடை நவின்றொழுகும்' | (செய்யுளியல் – 135) |
| 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை<br>வெண்பா நடைத்தே கலி' | (செய்யுளியல் – 107) |

**ஒலிக் கோலங்கள் :**

(i) தொன்மையான எந்த ஒரு மொழியும் சைகைகள் மற்றும் இசையிலிருந்துதான் தொடங்குகிறது. மொழிசார்ந்த கவிதைகளும் இசையோடும் இசைக்கருவியோடும் தான் பிறக்கின்றன.

(ii) ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வது 'ஒலிக்கோலங்கள்' எனப்படுகின்றன. இதுவே அந்தப் பாடலின் **'ஒலிப்பின்னல்'** என்றும் அழைக்கப்படுகிறது.

| எடுத்துக்காட்டுகள் | ஒலிக்கோலங்கள் |
|---|---|
| **புறநானூறு**<br>"கடந்தடு தானை மூவிருங்கூடி<br>உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;<br>முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;<br>முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;<br>யாமும் பாரியும் உளமே;<br>குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே" | க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வந்துள்ளன. |
| **புறநானூறு**<br>"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்<br>கடாஅ யானைக் கலிமான் பேக" | நெடில் ஒலிகளின் வருகை அதிகமாக உள்ளது. |
| **நற்றிணை**<br>"புணரின் புணராது பொருளே; பொருள்வயின்<br>பிரியின் புணராது புணர்வே" | ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்துள்ளது. |
| **புறநானூறு**<br>"நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை" | ஒலி நயத்துடன் சொல் விளையாட்டும் அமைந்துள்ளது. |

**சொற்புலம் :**

**சொல்லில் பொதிந்து கிடப்பவை**

(i) உணர்வு (ii) பொருள் (iii) கலை (iv) பண்பாடு (v) வரலாறு (vii) அரசியல்

**சொல்வளம் :** சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளம் ஆகும்.

**சொல்வளத்தில் அமைந்திருப்பவை :**

(i) ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்கள்





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



(ii) பல பொருள்கள் குறித்து வரும் ஒரு சொல்
(iii) பல சூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதல்
(iv) உணர்வும் தெளிவும் கொண்டதாக அமைந்திருந்தல்

**(எ.கா)** **முல்லைக்கலியில்** காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற பல சொற்கள் அமைந்துள்ளன. கி.ராஜநாராயணனின் **'கிடை'** என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைக் காட்டுகிற பல பெயர்கள் அமைந்துள்ளன.

**தொகை மொழிகள் :**

**தொகை மொழி** என்பது சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள பண்பாகும். இதனைத் தொல்காப்பியத்தின் எச்சவியல் **'தொகைநிலை'** என்று கூறுகிறது.

**(எ.கா)** "நீர் படுகின்ற பசுமையான கலம்" அல்லது "நீர்பட்ட பசுமையான கலம் என்பது **தொகாமல் வருகின்ற தொடர்மொழி** ஆகும்."

"நீர்படு பசுங்கலம்" என்பது **தொகைமொழி** ஆகும். – நற்றிணை

தொகை மொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பாகும்.

**தொடரியல் போக்குகள் :**

சொல்லுவோருடைய மொழித் திறனானது, கேட்போர் அல்லது வாசிப்போருடைய உளப்பாடாக மாறவேண்டும். பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்ப தொடர்கள் இயங்குகின்றன.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | தி.சு. நடராசன் |
| **ஊர்** | : | திருத்தங்கல் (விருதுநகர்) |
| **பணியாற்றிய பல்கலைக்கழகங்கள்** | : | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம். |
| **பணி** | : | தமிழ்ப் பேராசிரியர் |
| **படைப்புகள்** | : | கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள். |
| **இலக்கியப் பணிகள்** | : | சாகித்திய அகாதெமியின் பொதுக் குழு உறுப்பினர். ஞான பீடம் விருது தேர்வுக்குழு உறுப்பினர். |
| **சிறப்பு** | : | திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர். சிறந்த திறனாய்வாளர். |
| **விருது** | : | திறனாய்வுக் கலை என்ற நூலுக்காகத் தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளார். |



## கற்பவை கற்றபின்

1. **கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு – குன்றம் – ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச் சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

பாரதிதாசன் அழகின் சிரிப்பு கவிதையை மிக அழகாக எளிய நடையில் ஒரு குழந்தையின் சிரிப்பைப் போல் காட்சிப்படுத்தி இருக்கிறார். குன்றம் என்றால் மலை. குன்றம் பற்றி அழகின் சிரிப்பு என்னும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

| பாடல் | நடைச்சிறப்பு |
|---|---|
| தங்கத்தை உருக்கிவிட்ட<br>வானோடை தன்னிலே ஓர்<br>செங்கதிர் மாணிக்கத்துச்<br>செழும்பழம் முழுகும் மாலை<br>செங்குத்தாய் உயர்ந்த குன்றின்<br>மரகதத் திருமேனிக்கு<br>மங்காத பவழம் போர்த்து<br>வைத்தது வையம் காண! | தங்கத்தை உருக்கி விட்டதுபோலத் தோன்றும் வானத்து ஓடையில், செங்கதிர் மூழ்கும் நேரம் மாலைக் காலம். மரகதம் என்பது பச்சை நிறக் கல். பச்சை மலையில் பவழத்தைப் போர்த்தியது போல, மாலைக்கதிரானது குன்றத்தில் மறைவதாக கவிஞர் பாரதிதானே வெகு அழகாக வருணனை செய்கிறார். |



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



| | |
|---|---|
| அருவிகள், வயிரத் தொங்கல்!<br>அடர்செடி, பச்சைப்பட்டே!<br>குருவிகள், தங்கக்கட்டி!<br>குளிர்மலர், மணியின் குப்பை!<br>எருதின்மேற் பாயும் வேங்கை,<br>நிலவுமேல் எழுந்த மின்னல்,<br>சருகெல்லாம் ஒளிசேர் தங்கத்<br>தகடுகள் பாரடா நீ! | அருவிகள் வயிரமாலையாகவும், அடர்ந்த செடிகள் பச்சைப்பட்டுத் துணிகளாகவும், குருவிகள் தங்கக்கட்டிகளாகவும், குளிர்ந்த மலர்கள் மாணிக்கக் கற்களின் குவியலாகவும், காட்சியளிக்கின்றன என்கிறார் கவிஞர். மேலும், எருதின் மேல் பாயும் வேங்கை போல, நிலவின் மேல் எழுந்த மின்னல் போல, சருகுகளின் மேலே ஒளி பட்டு தங்கத் தகடுகளாக தோன்றுவதாக பாரதிதாசன் கூறுகிறார்.<br>அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் புதுக்கவிதை வடிவில் படைத்துள்ளார். இந்தப் பாடலில் உள்ள சொற்களில் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன. இயற்கை வருணனையானது அழகுற அமைந்துள்ளது. புதுக்கவிதை வடிவமைப்பில் எளிய நடையில் இருக்கிறது. |

**2. தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை/மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

(i) **யானை குறித்த பல சொற்கள் :** களிறு, களபம், மாதங்கம், ஆனை, கும்பி, தும்பி, போதகம், மதகயம், பிடி, கரிணி, வடவை, அதவை குஞ்சரம், வல்விலங்கு, கைம்மா (துதிக்கையுடைய விலங்கு)

(ii) **மலர் குறித்த பல சொற்கள் :** பூ, அரும்பு, முகை, மொட்டு, மொக்குள், அலரி.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### சிறுவினா

**1. கவிதை மறுதலைத் தொடரைச் சான்றுடன் விளக்குக.** பிடிஏ–6; செப். 2020

(i) உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடர் அமைப்பானது,

(ii) எழுவாய் + செயப்படுபொருள் (அல்லது) பிற அமைப்பு + பயனிலை என்றிருப்பது மரபாகும். ஆனால் சங்கப் பாடல்களில் இது பிறழ்ந்து வருகின்றது. இவ்வாறு பிறழ்ந்து வரும் அமைப்பு **'மறுதலைத் தொடர்'** எனப்படுகிறது. பாடலின் இறுதியில் தொடரியல் பிறழ்வு நிலை பெரும்பாலும் காணப்படுகிறது.

**(எ.கா)** பாண்டிய மன்னன் நம்பி நெடுஞ்செழியனின் இறுதிச் சடங்கில் சர்ச்சை ஏற்பட்ட போது பேரெயின் முறுவலார் பாடிய பாடலின் இறுதிப் பகுதி, தொடரியல் பிறழ்வுடன் அமைந்துள்ளது.

"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே" – புறநானூறு.

(iii) இப்பாடல் **'தொடியுடைய தோள் மணந்தனன்'** எனத் தொடங்கி, ஏனைய 20 அடிகளில் தனித்தனியே வினைமுற்றுகளோடு முடிகின்றன. பாண்டிய மன்னனின் **18 பண்புகளை** வரிசைப்படுத்திய பின்பு 'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதல்' என்று கூறிவிட்டு **"புதைத்தால், புதை; சுட்டால் சுடு"** என்ற புலவர் கூறுகிறார்.

**2. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.** மார்ச் – 2020

(i) **அறம், பொருள், இன்பம்** ஆகிய மூன்று பயன்களும் இருக்கும்படியாக இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது **கலை முழுமை** எனப்படுகிறது.

(ii) சங்க இலக்கியத்தில் அகத்திணையும் புறத்திணையும் பாடற்பொருளாக அமைந்துள்ளன. **தொல்காப்பியம்** அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் கருத்துகளோடு இணைத்துள்ளது. தொல்காப்பியத்தில் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் குறிப்பிடப்பட்டு, அதனுடன் அறவியல் கருத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன.

(iii) "அந்நில மருங்கின் அறமுதலாகிய
**மும்முதற் பொருட்கும்** உரிய என்ப" (தொல். செய்யுளியல்)
மும்முதற் பொருள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமாகும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. தி.சு. நடராசன் எழுதிய நூல்**

அ) தமிழ் அழகியல் ஆ) கானல்வரி
இ) பிறந்தது எப்படியோ ஈ) தமிழா நினைத்துப்பார்

**விடை:** அ) தமிழ் அழகியல்





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores





2. **தி.சு. நடராசனால் எழுதப்படாத நூல்**
அ) கவிதையெனும் மொழி ஆ) திறனாய்வுக் கலை
இ) தமிழ் அழகியல் ஈ) பிறந்தது எப்படியோ **விடை: ஈ) பிறந்தது எப்படியோ**

3. **'இடுக வென்றோ, சுடுக வென்றோ;
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே' என்ற வரிகள் இடம்பெற்ற நூல்**
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) பரிபாடல் ஈ) அகநானூறு **விடை: அ) புறநானூறு**

4. **போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்**
அ) தி.சு.நடராசன் ஆ) தேவதேவன்
இ) தெ.பொ. கிருஷ்ணசாமி ஈ) தி.ஜானகிராமன் **விடை: அ) தி.சு.நடராசன்**

5. **திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர்**
அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) பொ.வே. சோமசுந்தரனார்
இ) தி.சு.நடராசன் ஈ) மறைமலையடிகள் **விடை: இ) தி.சு.நடராசன்**

6. **எழுத்தையும் சொல்லையும் போன்று செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாக கருதும் நூல் ........... .**
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம் **விடை: அ) தொல்காப்பியம்**

7. **கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று எதில் குறிப்பிடப்படுகிறது?**
அ) கலை முழுமை ஆ) மொழிசார் கலை
இ) நடையியல் ஈ) ஒலிக்கோலங்கள் **விடை: ஆ) மொழிசார் கலை**

8. **பாவகைகளுடன் அறவியல் கருத்துகளும் இடம்பெற்றுள்ள நூல் ........... .**
அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
இ) அகத்தியம் ஈ) தொல்காப்பியம் **விடை: ஈ) தொல்காப்பியம்**

9. **கவிதையின் இயங்காற்றல் ........... ஆகும்.**
அ) ஒலிக்கோலங்கள் ஆ) நடையியல்
இ) சொற்புலம் ஈ) தொடரியல் போக்குகள் **விடை: ஆ) நடையியல்**

10. **நம்பி நெடுஞ்செழியனுடைய இறுதிச் சடங்கின் நிகழ்வுகளைப் பாடியவர் ......... .**
அ) பேரெயின் முறுவலார் ஆ) நக்கீரர்
இ) கபிலர் ஈ) பரணர் **விடை: அ) பேரெயின் முறுவலார்**

11. **'தொடியுடைய தோள் மணந்தனன்' என்று புகழ்பட்ட மன்னன் ......... .**
அ) நின்றசீர் நெடுமாறன் ஆ) நம்பி நெடுஞ்செழியன்
இ) உக்கிரப் பெருவழுதி ஈ) செண்பகப் பாண்டியன் **விடை: ஆ) நம்பி நெடுஞ்செழியன்**

12. **காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் .......... நிரம்பியுள்ளன.**
அ) குறிஞ்சிக்கலியில் ஆ) முல்லைக்கலியில்
இ) மருதக்கலியில் ஈ) நெய்தற்கலியில் **விடை: ஆ) முல்லைக்கலியில்**

13. **ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களில் குறிப்பிடும் நூல் .......... .**
அ) கிடை ஆ) கோபால்லபுரத்து மக்கள்
இ) கதவு ஈ) பெண்மனம் **விடை: அ) கிடை**

14. **கருத்து 1: சங்கப்பாடல்களில் தொடரமைப்பு பிறழ்ந்து வருவது 'கவிதை மறுதலைத் தொடர்' எனப்படுகிறது.**
**கருத்து 2: பாடலின் இறுதியில்தான் தொடரியல் பிறழ்வு நிலை பெரிதும் காணப்படுகிறது.**
அ) 1 மட்டும் சரி ஆ) 1 மற்றும் 2 சரியானவை
இ) 2 மட்டும் சரி ஈ) 1 மற்றும் 2 தவறானவை **விடை: ஆ) 1 மற்றும் 2 சரியானவை**

15. **பொருத்துக.**
அ) அறம், பொருள், இன்பம் - 1. தொகைமொழி
ஆ) அழகியல் நெறி - 2. ஒலிப்பின்னல்
இ) ஓசையும் பொருளும் - 3. பண்பாட்டு இலச்சினை
ஈ) நீர்படு பசுங்கலம் - 4. இலக்கியத்தின் பயன்
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 2, 4, 1 ஈ) 2, 1, 4, 3 **விடை: அ) 4, 3, 2, 1**



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**16.** **தொகைநிலை குறித்து தொல்காப்பிய .......... பேசுகிறது.**

அ) எச்சவியல் ஆ) மரபியல்

இ) கிளவியாக்கம் ஈ) புறத்திணையியல் **விடை: அ) எச்சவியல்**

**17.** **"கடந்தடு தானை மூவிருங் கூடி" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில், அதிகமாக அமைந்துள்ளவை .......... .**

அ) வல்லின மெய்கள் ஆ) மெல்லின மெய்கள்

இ) இடையின மெய்கள் ஈ) உயிர்நெடில் **விடை: அ) வல்லின மெய்கள்**

**18.** **பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனைப் பற்றி பாடிய பாடலில் .......... பண்புகளைப் வரிசைப்படுத்தியுள்ளார்.**

அ) 16 ஆ) 17 இ) 18 ஈ) 20 **விடை: இ) 18**

**19.** **தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது .......... .**

அ) சங்க இலக்கியம் ஆ) சிற்றிலக்கியம்

இ) காப்பிய இலக்கியம் ஈ) பக்தி இலக்கியம் **விடை: அ) சங்க இலக்கியம்**

**20.** **"ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி" என்ற தொடர் இடம் பெற்றுள்ள நூல் .......... .**

அ) தொல்காப்பியம் ஆ) கலித்தொகை

இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம் **விடை: அ) தொல்காப்பியம்**

## குறுவினா

**1.** **மொழிசார் கலையின் சிறப்பு பண்பு எது?**

(i) ஏனைய கலைகளிலிருந்து கவிதைக் கலையை வேறுபடுத்துவதே மொழிசார் கலையின் சிறப்புப் பண்பாகும்.

(ii) கிரேக்கம், வடமொழி முதலிய பிறமொழிகளை விட தமிழ் மொழி இப்பண்பினை நன்கு, வெளிப்படுத்துகிறது.

**2.** **இலக்கியம் தனக்குரிய அழகியல் சாதனமாக எவற்றை மாற்றிக் கொள்கிறது?**

(i) பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள்

(ii) பேசும்போதும் கேட்கும் போதும் அமைகின்ற தனிச்சூழல்கள்

(iii) வரலாறு.

**3.** **தமிழ் மொழியின் இயல்புவழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

(i) உவமம் (ii) உருவகம் (iii) எச்சம் (iv) குறிப்பு (v) உள்ளுறை (vi) இறைச்சி

**4.** **இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டிய பயன்கள் யாவை?**

அறம், பொருள், இன்பம் ஆகியவை இலக்கிய உருவாக்கத்தில் இடம் பெறவேண்டிய பயன்களாகும்.

**5.** **கலை முழுமை பற்றி தொல்காப்பியம் சுட்டிக் காட்டியுள்ளவற்றை எழுதுக.**

இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகளை இலக்கியத்தைப் படைக்கும் போதே இணைத்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது. இதுவே கலை முழுமையாகும்.

**6.** **சங்க இலக்கியத்தின் பாடற்பொருள்கள் யாவை?**

**சங்க இலக்கியத்தின் பாடற்பொருள்கள்:**

(i) அகத்திணை சார்ந்த செய்திகள் (ii) புறத்திணை சார்ந்த செய்திகள்

**7.** **கவிதையின் நடையியல் கூறுகள் யாவை?**

**கவிதையின் நடையியல் கூறுகள்:** (i) ஒலிக்கோலங்கள் (ii) சொற்புலம் (iii) தொடரியல் போக்குகள்

**8.** **கவிதையின் உந்துசக்திகளாக அமைபவை யாவை?**

**கவிதையின் உந்துசக்திகள்:** (i) மொழியின் தனிச்சிறப்புக் கூறுகள் (ii) கையாளும் வகைமைகள்

**9.** **ஒலிப்பின்னல் என்றால் என்ன?**

ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்ளும் அமைப்பே ஒரு பாடலின் ஒலிப்பின்னல் எனப்படுகிறது.

**10.** **சொல்லில் பொதிந்து கிடப்பவை யாவை?**

**சொல்லில் பொதிந்து கிடப்பவை:**

(i) உணர்வு (ii) பொருள் (iii) கலை (iv) பண்பாடு (v) வரலாறு (vi) அரசியல்





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**11. தமிழில் உள்ள சில தொகைமொழிகளை கூறுக.**

வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு, மாண்கவின் காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலி வெள்ளருவி, பறைக்குரல் எழிலி, பொய்படு சொல், நகைக்கூட்டம், ஓவச் செய்தி....

**12. நடையியல் எவற்றைச் சார்ந்துள்ளது? அதற்கான முதன்மை ஆதாரமாக விளங்குவது எது?**

(i) கவிதைகளின் வடிவமைப்புப் பகுதிகள் மற்றும் முழுமை ஆகியவற்றையே நடையியல் சார்ந்துள்ளது.

(ii) நடையியலின், இத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாக விளங்குவது சங்க இலக்கியம் ஆகும்.

## சிறுவினா

**1. தி.சு. நடராசன் – குறிப்பு எழுதுக.**

**தி.சு. நடராசன்**

| | | |
|---|---|---|
| சிறப்பு | : | திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர். |
| பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் | : | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம். |
| படைப்புகள் | : | தமிழ் அழகியல், கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழின் பண்பாட்டு வெளிகள். |

**2. அறவியல் கருத்துகள் தொல்காப்பியத்தில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன?**

(i) புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை தொல்காப்பியம் அறம், பொருள், இன்பம் ஆகிய அறவியல் பொருள்களோடு இணைத்துள்ளது.

(ii) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பொருள்களுக்கும் உரியன என்று அறவியல் கருத்துகளுடன் இணைத்துள்ளது.

**3. சொல்வளத்தில் அமைந்து வருவன குறித்து எழுதுக.**

**சொல்வளத்தில் அமைந்து வருவன**

(i) ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்கள்

(ii) பல பொருள்கள் குறித்து வரும் ஒரு சொல்

(iii) பலதுறைகள், பல சூழல்கள், பல புனைவுகள் ஆகியவற்றிற்கு உரியதாய் வருவன

(iv) உணர்வும் தெளிவும் கொண்டதாக வருவன.

**4. தொகைமொழிகள் – சிறுகுறிப்பு வரைக.**

**தொகைமொழிகள்**

(i) சங்க இலக்கிய மொழியின் அடையாளமான இப்பண்பினை **'தொகைநிலை'** என்று தொல்காப்பிய எச்சவியல் குறிப்பிட்டுள்ளது.

(ii) 'நீர்படுகின்ற பசுமையான கலம்' அல்லது 'நீர்பட்ட பசுமையான கலம்' என்பது தொகாமல் வருகின்ற தொடர்மொழி ஆகும்.

(iii) 'நீர்படு பசுங்கலம்' என்பது தொகைமொழி ஆகும்.

(iv) தமிழில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகைமொழிகள் உள்ளன.

**5. கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்றால் என்ன?**

(i) இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.

(ii) இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது.

(iii) இத்தகைய தன்மைதான், கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது.

(iv) இதனால் மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.

☆ ☆ ☆



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல் - தண்டி

கவிதைப்பேழை

## நூற்குறிப்பு



தமிழ் மொழியின் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றுள் அணி இலக்கணத்தைப் பற்றி மட்டும் கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும்.

**காவியதர்சம்** என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நூல் அமைப்பு :** இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | தண்டி |
| **காலம்** | : | கி.பி. (பொ.ஆ) 12-ஆம் நூற்றாண்டு |
| **ஊர்** | : | சோழநாட்டைச் சேர்ந்தவர் |

**பாடப்பகுதி :** பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஓங்கலிடை வந்து | - உயர்ந்த மலையின் மீது தோன்றி |
| உயர்ந்தோர் தொழ விளங்கி | - பண்பில் சிறந்த சான்றோர்கள் வணங்குமாறு தோன்றி |
| ஏங்கல் ஒலி நீர் | - ஆரவார ஒலியை எழுப்பும் கடல் நீர் சூழப்பட்ட |
| ஞாலத்து இருள் அகற்றும் | - உலகின் இருளை நீக்கும் |
| ஆங்கவற்றுள் | - அப்படி இருக்கக் கூடியவற்றுள் |
| மின்னேர் | - மின்னலுக்கு நிகரான ஒளியைத் தருகின்ற |
| தனியாழி | - ஒற்றைச் சக்கரத்துடன் |
| வெங்கதிர் ஒன்று | - வெம்மையான சூரியன் ஒன்றாகும் |
| ஏனையது | - மற்றொன்று |
| தன்னேர் இலாத தமிழ் | - தனக்கு நிகரில்லாத தமிழ் மொழியாகும். |

## பொருளுரை

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக விளங்குவது மற்றொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ் மொழி.

## விரிவான விளக்கம்

உலகின் இருளான புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் உலகின் இயக்கம் நடைபெறாது. தமிழ்மொழி இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் சூரியனையும் தமிழையும் வணங்குகிறார்கள்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



மின்னல் போன்ற ஒளியினை சூரியன் தருகிறது. எனவே 'மின்னேர் தனியாழி வெங்கதிர்' என்று சூரியனை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சூரியனுக்கு உவமையாகக் கூற மின்னல் இருக்கிறது. ஆனால் தமிழுக்கு நிகரான உவமையைக் கூற எதுவுமேயில்லை. எனவே தான் 'தன்னேர் இலாத தமிழ்' என்று பெருமையுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. ஓங்கல் – மலை | 5. ஞாலம் – உலகம் |
| 2. தொழ – வணங்க (பெரிய தோள்கள்) | 6. வெங்கதிர் – வெம்மையான கதிர்களை உடைய சூரியன் |
| 3. ஏங்கல் – கடல் | 7. மின்னேர் – மின்னலுக்கு நிகரான |
| 4. ஒலி – ஆரவாரம் | 8. தன்னேர் – தனக்கு நிகரான |

**பிரித்தெழுதுக :**

| | |
|---|---|
| 1. ஓங்கலிடை – ஓங்கல் + இடை | 4. ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள் |
| 2. ஏங்கொலி – ஏங்கல் + ஒலி | 5. தனியாழி – தனி + ஆழி |
| 3. இருளகற்றும் – இருள் + அகற்றும் | 6. வெங்கதிர் – வெம்மை + கதிர் |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. வெங்கதிர் – பண்புத்தொகை | 4. இருளகற்றும் – இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 2. உயர்ந்தோர் –வினையாலணையும் பெயர் | 5. மின்னேர், தன்னேர் – நான்காம் வேற்றுமைத் தொகைகள் |
| 3. இலாத – 'இல்லாத' என்பதன் இடைக்குறை | 6. விளங்கி, வந்து – வினையெச்சங்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**உயர்ந்தோர் – உயர் + த்(ந்) + த் + ஓர்** பிடிஏ–3
உயர் – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ**
வா – பகுதி 'வ' எனக் குறுகியது விகாரம்
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**விளங்கி – விளங்கு + இ** பிடிஏ–3
விளங்கு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :**

**குற்றியலுகரப் புணர்ச்சி**

1. **ஆங்கவற்றுள்** – ஆங்கு + அவற்றுள் அ.மா.வி 2019
**விதிகள்:** ஆங்கு + அவற்றுள்
(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி '**ஆங்க் + அவற்றுள்**' என்றானது.
(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**ஆங்கவற்றுள்**' என்றானது.

2. **உயர்ந்தோர்** – உயர்ந்து + ஓர்
**விதிகள்:** உயர்ந்து + ஓர்
(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' என்ற விதிப்படி '**உயர்ந்த் + ஓர்**' என்றானது.
(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**உயர்ந்தோர்**' என்றானது.

**உடம்படுமெய் புணர்ச்சி**

1. **தனியாழி** – தனி + ஆழி செப். 2020
**விதிகள்:** தனி + ஆழி
(i) '**இ ஈ ஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி '**தனி + ய் + ஆழி**' என்றானது. (யகர உடம்படு மெய் இடையில் தோன்றியது)
(ii) '**உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**தனியாழி**' என்றானது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



### பண்புப்பெயர் புணர்ச்சி

1. **வெங்கதிர்** – வெம்மை + கதிர்
   **விதிகள்:** வெம்மை + கதிர்
   (i) '**ஈறுபோதல் விதிப்படி**' 'மை' விகுதி கெட்டு '**வெம் + கதிர்**' என்றானது.
   (ii) '**முன்னின்ற மெய் திரிதல்**' என்ற விதிப்படி வருமொழி முதலெழுத்தான 'க' விற்கு இனமான 'ங' தோன்றி வெங்+கதிர் என்றானது. பின்னர் புணர்ந்து '**வெங்கதிர்**' என்றானது.

### மெய்யீற்றுப் புணர்ச்சி

1. **ஓங்கலிடை** – ஓங்கல் + இடை
   **விதி:** ஓங்கல் + இடை – மெய்யீற்றின் முன் உயிர் வந்ததால் '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**ஓங்கலிடை**' என்றானது.
2. இருளகற்றும் – இருள் + அகற்றும்
   **விதி:** இருள் + அகற்றும்
   மெய்யீற்றின் முன் உயிர் வந்ததால் '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**இருளகற்றும்**' என்றானது.

## பா வகை, அணி

**பா வகை** : நேரிசை வெண்பா
**விளக்கம்** :
(i) வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று நான்கு அடிகள் கொண்டதாக வரும்.
(ii) இரண்டாம் அடியின் இறுதிச் சீர் தனிச் சொல்லாக அமையும். (– ஆங்கவற்றுள்)
(iii) நான்காம் அடியில் மூன்று சீர்கள் அமைந்திருக்கும்.
**அணி** : பொருள் வேற்றுமை அணி
**அணி விளக்கம் :** இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது 'பொருள் வேற்றுமை அணி' ஆகும்.

## கற்பவை கற்றபின்

1. **வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**பாடல் 1 :**

அனைத்து உலகும் சூழ்போய், அரும்பொருள் கைக்கொண்டு,
இனைத்து அளவைத்து என்றற்கு அரிதாம் – பனிக்கடல்
மன்னவ! நின் சேனைபோல்; மற்று அது நீர்வடிவிற்று
என்னும் இது ஒன்றே வேறு.

**விளக்கம் :**

மன்னவனே! கடலும் நின் சேனையும் ஒரே வகையான இயல்பு உடையவை. குளிர்ந்த கடல், உலகம் முழுவதையும் சூழ்ந்து, பல அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு, இன்ன அளவை உடையது என்று அளப்பதற்கு அரியதாய் உள்ளது; உன் சேனையும் பல நாடுகளையும் கைப்பற்றுவதற்கு உலகம் முழுவதையும் சூழ்ந்து, பகை நாட்டு அரசர்களின் அரிய பொருள்களை எல்லாம் கைக்கொண்டு, இன்ன அளவை உடையது என்று அளப்பதற்கு அரியதாய் உள்ளது. ஆனால், கடல் 'நீர் வடிவில் உள்ளது' என்னும் ஓர் இயல்பு மட்டும்தான் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும்.

**பாடல் 2 :**

மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள
ஒலியும் பெருமையும் ஒக்கும்; – மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்.

**விளக்கம் :**

மிக்க தேர்ப்படையை உடைய எம்முடைய அரசனுடைய காஞ்சி மாநகரும் பெரிய கடலும் தமக்குள்ளே ஒலியாலும் பெருமையாலும் ஒத்தவை. எனினும் காஞ்சி மாநகரில் உள்ளவை எல்லாம் கடலில் இல்லை; கடலில் இருப்பவை எல்லாம் காஞ்சி மாநகரில் உள்ளன.

உயிரினும் ஓம்பப் படும்


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**2. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.**

தமிழ்மொழியானது தமிழ் மக்களின் அடையாளம், பண்பாட்டின் நீட்சி; "கல்தோன்றா மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி". மொழி தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம் மொழி மட்டுமே. தமிழ்மொழிக்கு இணையாக எம்மொழியும் இவ்வுலகில் இல்லை என்பது மிகையாகாது.

இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் பரவிக் கிடக்கிறது. தமிழ்மொழி பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் தமிழ் இன்றும் செழித்துக் கொண்டே இருக்கிறது.

உலகிலேயே சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழி தமிழ். தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களுக்கு ஈடாக உலகில் எம்மொழியிலுமில்லை. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. உணர்ச்சியைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வுகளைக் கொண்டு இலக்கியங்களைப் படைத்து உலக மொழிகளில் சிறந்த மொழியாக திகழச் செய்கிறார்கள்.

சங்க இலக்கியங்களின் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணைச் சார்ந்த செய்திகளையும் படிக்கும்போது பண்டைய தமிழர்களின் சிறப்பான வாழ்வுமுறை குறித்து வியப்பு உண்டாகிறது. இதனால்தான் தமிழ்மொழியானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உயிர்ப்போடு சிறந்த மொழியாக உலக மக்களால் போற்றப்படுகிறது. எனவே தன்னேர் இலாத தமிழ் மொழி என்பதில் மிகையாகாது.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிக்கான சான்று** அ.மா.வி 2019

அ) ஆங்கவற்றுள் ஆ) எத்திசை
இ) வெங்கதிர் ஈ) பூம்பாவாய்

**விடை: அ) ஆங்கவற்றுள்**

### குறுவினா

**1. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?** பிடிஏ–3

வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.

**2. தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** பிடிஏ–6

பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புமை இல்லாததுமாக விளங்குகின்ற தமிழ்மொழியானது கடலால் சூழப்பட்ட உலகின் புற இருளைப் போக்கும் சூரியனை விட உயர்ந்தது; தனக்கு நிகரில்லாமல் விளங்குவது ஆகும்.

**3. தண்டியலங்காரம் எவ்வகை நூல்?** அரையாண்டுத் தேர்வு 2019

தண்டியலங்காரம் அணி இலக்கணத்தைக் கூறும் நூல்.

**4. தண்டியலங்காரம் – குறிப்பெழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019

அணியிலக்கணத்தைக் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் ஒன்றாகும். இந்நூல் காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பிரிவுகளை உடையது.

### சிறுவினா

**1. பொருள் வேற்றுமை அணியை எடுத்துக் காட்டு கூறி விளக்குக.** பிடிஏ–6; காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

**பொருள் வேற்றுமை அணி – விளக்கம்**

இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது 'பொருள் வேற்றுமை அணி' ஆகும்.

**எடுத்துக்காட்டு:** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து (து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! – தண்டி

**அணிப்பொருத்தம்:** தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளை முதலில் கூறிப் பின்னர் 'தமிழ் தன்னிகர் இல்லாதது' என்று வேறுபடுத்தியுள்ளதால் இது பொருள் வேற்றுமை அணியாகும். இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அடி எதுகை சொற்களைக் கண்டறி.**
அ) வந்து - உயர்ந்தோர் ஆ) ஓங்கலிடை - உயர்ந்தோர்
இ) ஓங்கலிடை - ஏங்கொலிநீர் ஈ) ஞாலத்து - இருளகற்றும்
**விடை: இ) ஓங்கலிடை - ஏங்கொலிநீர்**

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூலைக் கண்டறி.**
அ) தொல்காப்பியம் ஆ) மாறனலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) முத்து வீரியம் **விடை: ஆ) மாறனலங்காரம்**

3. **கீழ்க்கண்டவற்றுள் அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்.**
அ) தண்டியலங்காரம் ஆ) மாறனலங்காரம்
இ) குவலயானந்தம் ஈ) இலக்கண விளக்கம் **விடை: ஈ) இலக்கண விளக்கம்**

4. **.......... என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது தண்டியலங்காரம்.**
அ) காவிய தர்சம் ஆ) இலக்கண கொத்து
இ) இந்திர வியாகரணம் ஈ) கௌமாரம் **விடை: அ) காவிய தர்சம்**

5. **வெங்கதிர் - இலக்கணகுறிப்பைக் கண்டறி.**
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை: அ) பண்புத்தொகை**

6. **ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் .......... என்ற செய்யுளில் இடம் பெற்றுள்ள பாவகை.**
அ) ஆசிரியப்பா ஆ) நேரிசை வெண்பா
இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா **விடை: ஆ) நேரிசை வெண்பா**

7. **தண்டியலங்காரத்தில் தமிழ் மொழிக்கு உவமையாகக் கூறப்பட்டது ............... .**
அ) சூரியன் ஆ) சந்திரன் இ) இமயமலை ஈ) குற்றால மலை **விடை: அ) சூரியன்**

8. **தண்டியார் வாழ்ந்த காலம் ............. நூற்றாண்டு.**
அ) கி.பி. 12 ஆம் ஆ) கி.பி 8 ஆம்
இ) கி.பி. 7 ஆம் ஈ) கி.பி. 9 ஆம் **விடை: அ) கி.பி. 12 ஆம்**

9. **கூற்று 1 : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்...... என்னும் செய்யுளில் பொருள் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.**
**காரணம் 2 : இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.**
அ) கூற்றும், காரணமும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும், காரணமும் தவறு
**விடை: அ) கூற்றும், காரணமும் சரி**

**குறுவினா**

1. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
(i) தண்டியலங்காரம் (ii) மாறனலங்காரம் (iii) குவலயானந்தம்.

2. **அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
(i) தொல்காப்பியம் (ii) வீரசோழியம் (iii) இலக்கண விளக்கம் (iv) தொன்னூல் விளக்கம் (v) முத்துவீரியம்.

3. **உலகத்தின் புற இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு பொதிகை மலையில் தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது **ஒளிர்கின்ற கதிரவன்** ஆகும்.

4. **மக்களின் அறியாமை இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது தமிழ்மொழியாகும்.

5. **தண்டியலங்காரத்தின் பெருமை யாது?**
இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் தண்டியலங்காரம் ஆகும்.

☆ ☆ ☆





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

விரிவானம்

## பாடப் பகுதி

ரா.அ. பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் உள்ள மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

## பாடச் சுருக்கம்



மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதியவை, 'உன்னுடைய அறிவு ஒவ்வொரு நாளும் வளர்ச்சி பெற்று வருகிறது. உன் மனம் என்ற தாமரையில் **பேரறிவு** என்ற கதிரவனின் கதிர்கள் படுவதால் உனக்கு நல்லின்பம் உண்டாகட்டும்.'

நம்மைவிட மெலியாருக்கு உதவி செய்து அவர்களை நமக்குச் சரிசமமாக உயர்த்துவதால் நாம் வலிமை பெறமுடியும்.

பிறமொழிகளை நீ அறிந்திருந்தால், பிறமொழி பத்திரிகைகளைப் படித்து, அவற்றில் காணும் புதுமைகளை தமிழ் பத்திரிகைகளில் புகுத்திட முடியும். தமிழை வளர்ப்பதை உன் கடமையாகக் கொள்ள வேண்டும். புதியவைகள் அனைத்தையும் தமிழில் கொண்டு வரவேண்டும்.

தன் உழைப்பை நம்பாமல், பிறரைச் சார்ந்து வாழ்பவர்கள் மூடர்கள். அவர்களைக் கண்டு சிரிப்பாயாக! உன்னுடைய அறிவால் முன்னேறு.

தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாட்டில் நோய்கள் நீங்குக! தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்கள் பெருகுக! தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகள் வளர்க!

ஆணும் பெண்ணும் ஓருயிர் கொண்ட உடலில் இரு தலைகள் போன்றவர்கள். அவற்றில் ஒன்று மற்றொன்றை விட தாழ்வில்லை. இரண்டும் சரிசமமானவை. பெண்ணை இழிவாக நடத்தியவன் தன் கண்ணைக் குத்திக் கொள்வது போல் ஆகும். பெண்ணை வீட்டினுள் அடைத்து வைப்பவன் தன் கண்களை மூடிக் கொள்வதற்குச் சமமாகும்.

நாட்டில் தொழில்கள் பெருகுவதற்குப் போராடு. வாணிபம், இயந்திரங்கள் பெருக வேண்டும். அதற்கான முயற்சிகளை வலிமையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

சங்கீதம், சிற்பம் குறித்த நூல்கள், தொழில்நுட்பம் பற்றிய இயந்திர நூல்கள், பூகோள (புவியியல்) நூல்கள், விண்வெளி பற்றிய நூல்கள், இயற்கை பற்றிய நூல்கள் தமிழ்நாட்டில் அதிகமாக எழுதப்பட வேண்டும்.

இவை அனைத்தையும் நிறைவேற்றும் சக்தியைத் தருமாறு இறைவனிடம் வேண்டிக் கொள்.

நீ வாழ்க!

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | பரலி. சு. நெல்லையப்பர் |
| பெற்றோர் | : | சுப்பிரமணிய பிள்ளை - முத்துலட்சுமி அம்மாள் |
| ஊர் | : | பரலிக் கோட்டை |
| காலம் | : | 18.09.1889 முதல் 28.03.1971 வரை |
| துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் | : | பாரதியார் நடத்திய சூரியோதம், கர்மயோகி இதழ்கள் மற்றும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்கள். |
| படைப்புகள் | : | நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்கள், வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று நூல். |
| பதிப்பித்த நூல்கள் | : | பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப் பாட்டு, முரசுப்பாட்டு. |
| பன்முகச் சிறப்பு | : | விடுதலைப்போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர். |
| சிறப்பு | : | பாரதியார் இவரை தன்னுடைய அருமைத் தம்பியாகக் கருதி பாராட்டி வந்தார். |



orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## கற்பவை கற்றபின்

1. **பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**

**பாரதியின் வாழ்வின் காலக்கோடு**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| டிசம்பர் 11, 1882 | எட்டயபுரத்தில் பிறந்தார். |
| 1893 | எட்டயபுர சமஸ்தானத்தில் புலவர்கள் அவையில் இவருக்கு 'பாரதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது. |
| 1897 | செல்லம்மாளை மணந்தார். |
| 1898 – 1902 | காசி இந்துக்கல்லூரியில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அலகாபாத் சர்வகலாசாலையில் புதுமுகத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சியடைந்தார். வடமொழியோடு இந்தியிலும் தேர்ச்சி பெற்றார். |
| 1904 | மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 'விவேகபானு' என்ற இதழில் இவரது கவிதை முதன்முதலாக வெளிவந்தது. |
| 1904 – 1906 | கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் நட்பு கிடைத்தது. தாதாபாய் நௌரோஜி தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதா தேவியைச் சந்தித்து தனது குருவாக ஏற்றுக் கொண்டார். 1905 இல் 'சக்கரவர்த்தினி' என்ற இதழைத் தொடங்கினார். |
| 1907 | 'இந்தியா' என்னும் வார இதழையும் 'பாலபாரதம்' என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றார். அங்கு திலகர், அரவிந்தர், லாலா லஜபதிராய் ஆகியோரை சந்தித்தார். |
| 1908 | 'சுதேச கீதங்கள்' என்ற தனது முதல் நூலை வெளியிட்டார். ஆங்கிலேய அரசு இவரைக் கைது செய்ய எண்ணியதால் புதுவை சென்றார். அங்குக் குவளைக் கண்ணனின் நட்பு கிடைத்தது. |
| 1909 | பாரதியின் இரண்டாம் கவிதைத் தொகுதியான 'ஜன்ம பூமி' வெளியானது. |
| 1912 | கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற கவிதை நூல்களை இயற்றினார். 'பகவத் கீதை'யை தமிழில் மொழிபெயர்த்தார். |
| 1918 | கடலூர் அருகே பாரதி கைது செய்யப்பட்டு 34 நாள்கள் சிறையில் இருந்தார். விடுதலையானவுடன் கடையத்திற்குச் சென்றார். |
| 1919 | மீண்டும் சென்னை வந்தார். இராஜாஜியின் இல்லத்தில் மகாத்மா காந்தியை சந்தித்தார். |
| 1920 | மீண்டும் சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். |
| 1921 ஜூலை | திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை பாரதியாரைத் தாக்கியதில் நோயுற்றார். |
| 1921 செப்டம்பர் 12 | பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்தார். |

2. **காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனை கடிதம் ஒன்றினை எழுதுக.**

இடம் : மொடையூர்,
நாள் : 20.05.2021.

அன்புள்ள மகாகவி பாரதி அவர்களுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீங்கள் நலமா? உங்களுடைய உடல் நலம் நன்றாக இருக்கும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். உங்களுடைய படைப்புகள் அனைத்தையும் நான் படித்துள்ளேன். ஒரு சிறந்த மனிதனாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் உங்களுடைய படைப்புகளை மட்டும் படித்தாலே போதும். உங்கள் படைப்புகளில் எனக்கு மிகவும் பிடித்தது.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?"

இந்தப் பாடலானது நம் வீரத்தின் அடையாளமாக திகழ்கிறது எனலாம்.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



நேர்மையின் மறு உருவம் நீ! ஒழுக்கத்தின் உருவமே! வீரத்தை வளர்த்த வீரமே! உன்னால் இந்நாட்டில் வீரம் பிறந்தது. அதனால் விடுதலை பிறந்தது. இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்த நம் நாட்டை, வீரம் மிகுந்த பாடல்களைப் பாடி ஒவ்வொரு குடிமகனையும் வீரனாக்கி விடுதலை பெற செய்தவனே! உன் புகழ் என்றென்றும் வாழும், வளரும். முதன்முதலில் பெண்ணடிமையைப் பேசியவன் நீயே. உன்னால் பெண்களும் ஆணாதிக்கத்திலிருந்து விடுப்பட்டு கல்வி கற்று அனைத்து அரசாங்க பதவிகளில் இருக்கிறார்கள்.

உன்னால் மட்டுமே முடியும், எல்லாவற்றையும் சாதித்துக்காட்ட. உன் வழியை பின்பற்றினால் என்னாலும் முடியும். உன் புகழ் ஓங்குக. வாழ்க.

இப்படிக்கு
செ. ஜெயஸ்ரீ செந்தாமரை

உறைமேல் முகவரி

மகாகவி பாரதியார்,
எண் - 153, பெருமாள் கோயில் சன்னதி,
எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

## பிடிஏ மாதிரி வினா-விடைகள்

### பலவுள் தெரிக.

**1. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர்** பிடிஏ–1

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

**விடை: ஆ) பாரதியார்**

**2. பாரதியார், எங்கிருந்து பரலி சு.நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்?** பிடிஏ–3

அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை

**விடை: அ) புதுச்சேரி**

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. 'பாரதியின் கடிதங்கள்' என்ற நூலைப் பதிப்பித்தவர் .......... .**

அ) ரா.அ.பத்மநாபன் ஆ) பரலி. சு. நெல்லையப்பர்
இ) குவளைக் கண்ணன் ஈ) கல்கி

**விடை: அ) ரா.அ.பத்மநாபன்**

**2. பரலி சு.நெல்லையப்பர் பாரதியை விட .......... ஆண்டுகள் இளையவர்.**

அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு

**விடை: இ) ஏழு**

**3. 'வம்சமணி தீபிகை' என்ற நூலை எழுதியவர் ................. .**

அ) பாரதியார் ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசைமணி

**விடை: இ) கவிகேசரி சாமி தீட்சிதர்**

**4. 'வம்சமணி தீபிகை' நூலை திருத்தி எழுதித் தருவதற்காக பாரதி, யாருக்கு கடிதம் எழுதினார்?**

அ) வெங்கடேசுர எட்டப்பர் ஆ) ஜெகவீர ராம எட்டப்பர்
இ) ஜெகவீர பாண்டிய எட்டப்பர் ஈ) முத்து வீர எட்டப்பர்

**விடை: அ) வெங்கடேசுர எட்டப்பர்**

### குறுவினா

**1. 'பாரதி கடிதங்கள்' என்ற நூலில் இடம் பெற்றுள்ள கடிதங்கள் குறித்து எழுதுக.**

பாரதியார் தனது பதினைந்தாவது வயதில் கல்வி கற்க உதவி வேண்டி எட்டயபுர அரசருக்கு எழுதிய கடிதம் முதல் தன்னுடைய மறைவுக்கு முன்னர் குந்தி கேசவருக்கு எழுதிய கடிதம் வரை இடம்பெற்றுள்ளன.

**2. பாரதியார் - பரலி சு. நெல்லையப்பர் உறவு குறித்து எழுதுக.**

(i) பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவர்.
(ii) பாரதியார் இவரைத் தன்னுடைய உடன்பிறந்த தம்பி போன்று கருதி அன்பு காட்டி வந்தார்.

**3. பரலி சு.நெல்லையப்பர் பதிப்பித்த பாரதியின் நூல்கள் யாவை?**

பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாபாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தார்.

**4. பரலி சு.நெல்லையப்பர் துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் யாவை?**

பாரதியார் நடத்திய **சூரியோதயம், கர்மயோகி,** மற்றும் **லோகோபகாரி, தேசபக்தன்** ஆகிய இதழ்களில் துணையாசிரியராகப் பணியாற்றினார்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**5. பரலி சு.நெல்லையப்பர் இயற்றிய கவிதை நூல்கள் யாவை?**

**பரலி சு.நெல்லையப்பர் இயற்றிய கவிதை நூல்கள்:** நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி.

**6. பரலி சு.நெல்லையப்பரின் பன்முகச் சிறப்பினை எழுதுக.**

**பரலி சு.நெல்லையப்பரின் பன்முகச் சிறப்புகள்:**

(i) விடுதலைப் போராட்ட வீரர், (ii) கவிஞர், (iii) எழுத்தாளர், (iv) மொழிபெயர்ப்பாளர், (v) இதழாளர், (vi) பதிப்பாளர்.

**7. நாம் வலிமை பெறும் வழி எதுவென்று பாரதியார் கூறுகிறார்?**

நம்மை விட கல்வி அறிவிலும் பொருளாதாரத்திலும் தாழ்ந்து இருப்போர்களை நமக்கு நிகராக உயர்த்துவதுதான் நாம் வலிமை பெறும் வழியாகும் என்று பாரதியார் கூறுகிறார்.

**8. வடநாட்டு மொழிகளை அறிந்திருப்பதால் உண்டாகும் பயன் எதுவென்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்?**

வடநாட்டு மொழியில் வெளிவரும் பத்திரிகைகளில் உள்ள புதுமைகளை தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் புகுத்த முடியும் என்பதே பயனாகும்.

**9. தமிழ் வளர்க்கும் கடமையை எவ்வாறு செய்ய வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?**

தமிழில் புதிய செய்தி, புதிய இன்பம், புதிய உண்மை, புதிய யோசனை ஆகியவற்றைப் புகுத்தி தமிழை வளர்க்க வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்.

**10. பழங்காலத்து மூடர்கள் என்று பாரதி, யாரைக் குறிப்பிடுகிறார்?**

தன் சொந்த உழைப்பை நம்பாமல் பிறரைச் சார்ந்து பிழைப்பவர்களை மூடர்கள் என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

**11. தமிழ்நாட்டில் அதிகளவில் இருக்க வேண்டிய நூல்களாகப் பாரதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

**பாரதியார் குறிப்பிடும் நூல்கள்:**

(i) சங்கீத நூல்கள், (ii) சிற்பக்கலை நூல்கள், (iii) இயந்திர நூல்கள், (iv) பூகோள நூல்கள், (v) விண்வெளி நூல்கள், (vi) இயற்கை நூல்கள்.

## சிறுவினா

**1. பாரதியார் தம் கடிதத்தில் கையாண்டுள்ள உருவக நயத்தை எடுத்து எழுதுக.**

(i) "நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள்-ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகும்." என்ற அடிகளில் உருவக நயம் அமைந்துள்ளது.

(ii) **'உள்ளக்கமலம்'** – உருவகம்.

(iii) உள்ளக்கமலம் என்றால் 'மனத் தாமரை' என்பது பொருளாகும். 'உன்னுடைய மனத்தாமரையில் பேரறிவாகிய சூரியனின் கதிர்கள் விழுவதால் நல்லின்பம் உண்டாகும்'.

(iv) உவமைக்கும் உவமேயத்திற்கும் வேறுபாடின்றி உவமையே பொருளாக வருவது **உருவகம்** ஆகும். உள்ளக் கமலம், பேரறிவாகிய சூரியக் கதிர்கள் இரண்டு சொற்களும் உருவக நயத்துடன் அமைந்துள்ளன.

**2. "உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.**
**பற! பற! -மேலே! மேலே! மேலே!" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : இவ்வடிகள் பாரதியார், பரலி சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்** : உன்னுடைய அறிவை விரிவு செய்து வாழ்க்கையில் மேலும் மேலும் முன்னேறிச் செல்க!

**விளக்கம்** : பறவைகளுக்கு சிறகுகள் முளைத்ததும் அவை வானில் பறந்து செல்கின்றன. அதுபோல உன்னுடைய அறிவை மேலும் மேலும் விரிவு செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று பாரதியார் எழுதியுள்ளார்.

**3. தமிழ்நாடு எவ்வாறெல்லாம் சிறக்க வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?**

தமிழ்நாட்டில்

(i) நோய்கள் நீங்க வேண்டும்.

(ii) வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும்.

(iii) தமிழ்ப் பள்ளிக்கூடங்களில், மாணவர்கள் புதிய கலைகள் அனைத்தையும் கற்று வாழ்வில் உயர வேண்டும்.

(iv) சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, விண்வெளி, இயற்கை குறித்த ஆயிரக்கணக்கான நூல்கள் தோன்ற வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்.

**4. பெண்கள் பற்றி பாரதியார் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவற்றை எழுதுக.**

(i) ஆணும் பெண்ணும் ஒரே உயிரின் இரு தலைகள் போன்றவர்கள்.

(ii) அவர்களுள் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர் இல்லை. இருவரும் சரிசமமானவர்கள்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



(iii) பெண்ணை இழிவுப்படுத்துகின்றவன் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டதற்குச் சமமாகும்.
(iv) பெண் அறிவு பெறக்கூடாது என்று எண்ணி வீட்டிலே பூட்டி வைப்பவன் தன் கண்ணை மூடிக்கொள்வதற்குச் சமமாகும்.

**5. வம்சமணி தீபிகை என்ற நூலை பாரதியார் திருத்தி வெளியிட எதற்காக விரும்பினார்?**

(i) வம்சமணி தீபிகை என்ற நூலை எழுதியவர் கவிகேசரி சாமி தீட்சிதர் ஆவார்.
(ii) அந்நூல், எட்டயபுர மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதப்பட்டதாகும்.
(iii) அந்நூலில் பல விதமான குற்றங்கள் இருந்ததால் அதனைத் திருத்தி வெளியிட பாரதியார் விரும்பினார்.
(iv) தன் விருப்பத்தை எட்டயபுரத்தை ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினார். ஆனால் பாரதியின் ஆசை நிறைவேறவில்லை.

☆ ☆ ☆

**உயிரினும் ஓம்பப் படும் - மொழி**

# இயல் 1

# தமிழாய் எழுதுவோம்

**இனிக்கும் இலக்கணம்**

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.** பிடிஏ–2, 6; அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**விடை: இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

**2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.** செப். 2020

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**விடை: அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

**3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

(i) நான் இன்று மாலை ஊருக்கு **முடிந்தால்** வருவேன். உன்னிடம் இருக்கும் புத்தகங்களை எனக்கு **தரலாமே.**
(ii) இவ்வேலையை செய்து **முடித்தால்** பரிசு **தரலாம்.**

**4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

**தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்:**

(i) எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன, ல, ள, ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து உச்சரிக்கப் பழகுதல் வேண்டும்.
(ii) தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.
(iii) தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழக வேண்டும்.
(iv) வேகமாக எழுத முயற்சிப்பது பிழைக்கு வழிவகுக்கும்.
(vi) கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## பிடிஏ மாதிரி வினா-விடைகள்

### பலவுள் தெரிக.

**1. உயிரெழுத்துக்கள் .................. வகைப்படும்.** பிடிஏ–2

அ) மூன்று ஆ) ஆறு
இ) எட்டு ஈ) இரண்டு

**விடை: ஈ) இரண்டு**



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**2.** **பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க :** செப்–2020
அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
**விடை:** ஆ)

## குறுவினா

**1.** **எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?** பிடிஏ–1
**எழுதும் போது ஏற்படும் பிழைகள்:**
(i) எழுத்துப்பிழை (ii) சொற்பொருட்பிழை (iii) சொற்றொடர்ப் பிழை (iv) பொதுவான பிழைகள் சில

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக.

**1.** **கீழ்க்காண்பவற்றுள் சரியான தொடரைத் தேர்க.**
அ) நேற்று மாலை இயக்குனர் வந்தார் ஆ) நேற்று மாலை இயக்குநர் வந்தார்
இ) நேற்று மாளை இயக்குனர் வந்தார் ஈ) நேற்று மாலை இயக்குணர் வந்தார்
**விடை:** **ஆ) நேற்று மாலை இயக்குநர் வந்தார்**

**2.** **'பல் + முகம்' சேர்த்து எழுதுக.**
அ) பன்முகம் ஆ) பல்முகம் இ) பண்முகம் ஈ) பந்முகம் **விடை:** **அ) பன்முகம்**

**3.** **ஈரொற்றாய் அமைவை யாவை?**
அ) ட்,ற் ஆ) க், ச், த், ப் இ) ய், ர், ழ் ஈ) ஞ், ந், வ் **விடை:** **இ) ய், ர், ழ்**

**4.** **பல் + நூல் என்பதைச் சேர்த்து எழுதும் போது எவ்வாறு மாறும்?**
அ) பல்நூல் ஆ) பல நூல் இ) பன்னூல் ஈ) பண்நூல் **விடை:** **இ) பன்னூல்**

**5.** **கீழ்க்கண்டவற்றில் பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) என் தாயார் வந்துவிட்டார் ஆ) அறம் செய்ய விரும்பு
இ) என்னிடம் பல புத்தகங்கள் உள்ளன ஈ) குளத்தில் தாமரை அளகாகப் பூத்திருந்தது
**விடை:** **ஈ) குளத்தில் தாமரை அளகாகப் பூத்திருந்தது**
**சரியான தொடர்:** குளத்தில் தாமரை **அழகாகப்** பூத்திருந்தது.

**6.** **கீழ்க்கண்டவற்றில் சரியான தொடரைத் தேர்க.**
அ) இளங்கோ முன்னூறு ரூபாய் சேமிக்க முயற்சித்தான்
ஆ) இளங்கோ முந்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்
இ) இளங்கோ முன்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்
ஈ) இளங்கோ முண்ணூறு ரூபாய் சேமிக்க முயற்சித்தான்
**விடை:** **ஆ) இளங்கோ முந்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்**

**7.** **கீழ்க்கண்டற்றில் பேச்சு தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**
அ) பசுமாடு கன்றைப் போட்டது ஆ) பசுமாடு கன்றை ஈன்றது
இ) மாணவர்கள் வந்தார்கள் ஈ) பூக்களில் தலைமை வாய்ந்தது தாமரை
**விடை:** **அ) பசுமாடு கன்றைப் போட்டது**

**8.** **கீழ்க்கண்டவற்றில் சரியாக அமைந்துள்ள சொற்குழுவைக் காண்க.**
அ) நிர்வாகம், கர்மம், முயற்ச்சி ஆ) நிருவாகம், கன்மம், முயற்சி
இ) காட்ச்சி, கன்டு, மண்றம் ஈ) டமாரம், ரப்பர், க்ரீடம்
**விடை:** **ஆ) நிருவாகம், கன்மம், முயற்சி**

**9.** **ஆய்த எழுத்து குறித்து கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்க.**
i) ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
ii) ஆய்த எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்
iii) ஆய்த எழுத்து தனிக்குறிலை அடுத்து வரும்
iv) ஆய்த எழுத்து தனிநெடிலை அடுத்து வரும்
அ) (i) மற்றும், (iii) சரியானவை ஆ) (ii) மற்றும், (iv) சரியானவை
இ) (i) மற்றும், (iv) சரியானவை ஈ) (ii) மற்றும், (iii) சரியானவை
**விடை:** **அ) (i) மற்றும், (iii) சரியானவை**




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores


**10. கீழ்க்காண்பவற்றுள் தவறானதைத் தேர்க.**

அ) கடல் + கரை – கடற்கரை ஆ) கல் + சிலை – கற்சிலை

இ) மக்கள் + பேறு – மக்கள் பேறு ஈ) நாள் + மீன் – நாண்மீன்

**விடை: இ) மக்கள் + பேறு – மக்கள் பேறு**

**சரியான தொடர்:** மக்கள் + பேறு – **மக்கட்பேறு**

## குறுவினா

**1. எழுத்துப் பிழைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

**எழுத்துப் பிழைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் :**

(i) பேசுவதைப் போலவே எழுத எண்ணுவது முதன்மையான காரணம்.
(ii) குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பது.
(iii) எழுத்துகள் வரும் முறையில் தெளிவு இல்லாமல் இருப்பது.

**2. ஆய்த எழுத்து சொல்லில் வரும் முறைகள் குறித்து எழுதுக.**

**ஆய்த எழுத்து சொல்லில் வரும் முறைகள் :**

(i) ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
(ii) தனிச்சொல்லாக இருப்பின் மூன்று எழுத்துகளில் வரும்.
(iii) தனிக்குறிலை அடுத்து வரும்.

**(எ.கா)** அஃது, எஃகு, கஃசு

**3. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக எந்த எழுத்துகள் வருவதில்லை?**

மெல்லின எழுத்துகளில் **ண, ன** ஆகியவை சொல்லின் தொடக்கமாக வாரா.

**(எ.கா)** மெல்லின எழுத்துகள்: ங, ஞ, ண, ந, ம, ன

ங – ஙப்போல் வளை ஞ – ஞயம்பட உரை ந – நன்றி மறவேல் ம – மனம் தடுமாறேல்

**4. ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகள் எப்போது இயல்பாக நிற்கும்?**

ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகளுக்குப் பின்,

(i) வியங்கோள் வினைமுற்று வரும்போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** தேய்க, வாழ்க, செல்க, ஊர்க
(ii) 'கள்' விகுதி வரும் போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** நாய்**கள்**, கால்**கள்**, தோள்**கள்**
(iii) வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும் போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** தாய்**சேய்**, ஊர்**சூழ்**, செல்**கணம்**

**5. ஈரொற்றாய் வரும் ஒற்றுகள் யாவை?**

ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். ஏனையவை அளபெடுத்தால் மட்டுமே வரும்.

**(எ.கா)** பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை

**6. ரகர, ழகர ஒற்றுகளின் விதிகளை எழுதுக.**

தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.

தனிக்குறிலை அடுத்து ரகர ஒற்று வருமானால் அதனைத் தமிழ் இயல்புக்கேற்ப திருத்தி எழுத வேண்டும்.

**(எ.கா)**

| பிழை | திருத்தம் |
|---|---|
| நிர்வாகம் | நிருவாகம் |
| கர்மம் | கருமம், கன்மம் |

**7. ஒரு, இரு என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை எவ்வாறு மாற்றமடையும்?**

ஒரு, இரு என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை முறையே **ஓர், ஈர்** என்று மாற்றமடையும்.

**8. அது, இது, எது என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை எவ்வாறு மாற்றமடையும்?**

அது, இது, எது என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை முறையே **அஃது, இஃது, எஃது** என்று மாற்றமடையும்.

**9. அல்வழிப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை எழுதுக.**

**அல்வழிப் புணர்ச்சி:**

(i) தனிக்குறிலை அடுத்து வரும் லகரம், வருமொழியில் தகரம் வந்தால் ஆய்த எழுத்தாக மாறும்.
(ii) தகரம் றகரமாக மாறும்.

**(எ.கா)** அல்+ **திணை** – அஃறிணை; பல்+**துளி** – பஃறுளி



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**சிறுவினா**

**1. வல்லின மெய்கள் சொற்றொடரில் அமைவதற்கான விதிகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

(i) வல்லின மெய்கள் சொல்லின் இறுதியில் வாரா.

(ii) வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் ஆகிய மெய்யெழுத்துகளை அடுத்து மெய்யெழுத்து வரக்கூடாது.

**(எ.கா)**

| பிழை | திருத்தம் |
|---|---|
| காட்ச்சி | காட்சி |
| முயற்ச்சி | முயற்சி |

(iii) க், ச், த், ப் ஆகியவற்றின் பின் அந்த எழுத்துகளின் வரிசைகளே அமையும். பிற மெய்யெழுத்து வராது.
**(எ.கா)** கா**க்கை**, ப**ச்சை**, ப**த்து**, உப்பு

(iv) ட், ற் ஆகிய மெய்யெழுத்துகளுக்குப் பின் அவ்வெழுத்து வரிசை அமையும். **(எ.கா)** பா**ட்டு**, கா**ற்று**

(v) ட்,ற் ஆகிய மெய்யெழுத்துகளுக்குப் பின் க, ச, ப, ஆகிய எழுத்துகளின் வரிசை அமையும்.

**(எ.கா)**

| | 'க' வரிசை | 'ச' வரிசை | 'ப' வரிசை |
|---|---|---|---|
| ட் | வெட்கம் | காட்சி | திட்பம் |
| ற் | கற்க | கற்சிலை | கற்பவை |

(vi) ட, ற ஆகிய எழுத்துகள் சொல்லின் முதலெழுத்தாக அமையக் கூடாது.

(vii) தனிச்சொல்லின் இடையில் வல்லின எழுத்துகள் வந்தால் அவற்றின் முன் அவ்வல்லின மெய் வரும்.
**(எ.கா) தக்கை, பச்சை**, பட்டம், **பத்து, தப்பு, கற்று**

(viii) தனிச் சொல்லின் இடையில் வல்லின எழுத்துகள் வந்தால் அவ்வல்லின எழுத்துகளின் இனமான மெல்லின மெய்களும் தோன்றும். **(எ.கா)** த**ங்**கை, இ**ஞ்**சி, ப**ண்**டு, ப**ந்**து, பா**ம்**பு, க**ன்**று

**2. லகர ளகர விதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

(i) வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு.
**(எ.கா)** கல் + சிலை = கற்சிலை
கடல் + கரை = கடற்கரை

(ii) லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** பல் + முகம் = பன்முகம்

(iii) ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** மக்கள் + பேறு = மக்கட்பேறு

(iv) ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** நாள் + மீன் = நாண்மீன்

(v) வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும்.
**(எ.கா)** சொல் + துணை = சொற்றுணை

(vi) வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும்.
**(எ.கா)** பல் + நூல் = பன்னூல்

(vii) அல்வழியில், தனிக்குறிலடுத்த லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும்.
**(எ.கா)** அல் + திணை = அஃறிணை
பல் + துளி = பஃறுளி

**பொருள் வேறுபாட்டினை உணர்த்தும் சொற்கள்**

| | |
|---|---|
| அறம் | தருமம், நீதி |
| அரம் | ஒரு வகைக் கருவி (மரம் அறுப்பது) |
| குறை | சுருக்கு குறைத்து மதிப்பிடு |
| குரை | நாய் குரைத்தல் |
| வளம் | வளமை, அழுகு |
| வலம் | சுற்றுதல், வலப்பக்கம் |
| களம் | இடம், போர்க்களம் (காலாண்டுத் தேர்வு 2019) |
| கலம் | கப்பல், பாத்திரம் (காலாண்டுத் தேர்வு 2019) |
| கிளி | பறவை, வெட்டுக்கிளி |
| கிலி | அச்சம், பயம் |
| என்றாள் | இலக்கணம் படித்தேன் **என்றாள்.** |
| என்றால் | தனிக்குறில் **என்றால்** என்ன? |
| போனாள் | உடற்பயிற்சி செய்து மெலிந்து **போனாள்** |
| போனால் | சொல்லப்**போனால்** அவன் செய்தது சரிதான் |
| ஆணை | கட்டளை |
| ஆனை | யானை |
| மழை | மழைநீர், மேகம் |
| மலை | குன்று, பொருப்பு, வெற்பு, சிகரம் |





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
   **விடை: இ) தொல்காப்பியம்**

2. **''மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு'' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,**
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
   **விடை: ஈ) க, ங இரண்டும் சரி**

3. **''மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!'' – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்** பிடிஏ–1
   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
   இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை
   **விடை: இ) அடிஎதுகை, சீர்மோனை**

4. **கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.** பிடிஏ–5
   **கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
   **விடை: இ) இரண்டு கருத்தும் சரி**

5. **பொருத்துக.** பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019
   அ) தமிழ் அழகியல் – 1) பரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ – 2) தி.சு.நடராசன்
   இ) கிடை – 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி – 4) கி.ராஜநாராயணன்
   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
   **விடை: ஈ) 2, 3, 4, 1**

**குறுவினா**

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.** காலாண்டுத் தேர்வு 2019
   (i) 'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய்.135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
   (ii) 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
   வெண்பா நடைத்தே கலி' (செய். 107)
   என்றும் சொல்லுகிறது; 'கவிதையின் இயங்காற்றல்தான் நடை' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

2. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானை கலிமான் பேக'' – இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக்குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**
   (i) படாஅம், கெடாஅ, கடாஅ – செய்யுளிசை அளபெடை
   (ii) ஈத்த – பெயரெச்சம்

3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?** அ.மா.வி 2019; மார்ச் 2020
   (i) கடினமான வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலை நேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்களால் சிவந்திருக்கிற வானத்தைப் போல் சிவந்து காணப்படும்.
   (ii) தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் பருத்த தோள் மீது முத்துகள் சிதறியது போன்று காணப்படும். இவற்றையெல்லாம் வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்று கவிஞர் சிற்பி கூறுகிறார்.

4. **விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   (i) வைகுறு விடியல் காண்பது வனப்பு
   (ii) அதிகாலை விடியல், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். (வனப்பு – அழகு)
   (iii) கன்னி விடியல் கவினுறு வனப்பு. கன்னி விடியலை வைத்து கவிஞர் கவிதை எழுதுவர். அக்கவிதை அழகு தரும்.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**சிறுவினா**

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.**

**சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் என்ற பண்பு அமைந்துள்ள விதம் :** பிடிஏ–2; அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

| சங்கப்பாடல் | ஒலிக்கோலம் |
|---|---|
| "கடந்தடு தானை மூவிருங்கூடி<br>உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"<br>எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் | இப்பாடலில் மெல்லின, இடையின மெய்களை விட வல்லின மெய்கள் அதிகமாக அமைந்துள்ளன. |
| "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்<br>கடாஅ யானைக் கலிமான் பேக"<br>என்ற புறநானூற்றுப் பாடல் | உயிர் நெடில் ஒலிகள் அதிகமாக அமைந்துள்ளன. |
| "புணரின் புணராது பொருளே; பொருள்வயின்<br>பிரியின் புணராது புணர்வே"<br>என்ற நற்றிணைப் பாடல் | ஒரே சொல் மீண்டும் மீண்டும் அமைந்துள்ளது. |
| "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை"<br>என்ற புறநானூற்றுப் பாடல் | ஒரே சொல் மீண்டும் மீண்டும் அமைந்திருப்பதுடன் சொல் விளையாட்டும் சேர்ந்து அமைந்துள்ளது. |

**2. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.** அரையாண்டுத் தேர்வு 2019

(i) மாலைநேரத்தில் செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மலையுச்சியின் மீது சென்று மறையும் காட்சியானது, கதிரவன் தன் தலையைச் சாய்த்து உறங்குவது போல் உள்ளது.

(ii) கதிரவன் மறைகின்ற மாலை நேரத்தில் வானம் முழுவதும் சிவந்த நிறத்தில் காணப்படும். அக்காட்சியானது, வானத்தில் செந்நிறப்பூக்கள் செறிந்து, பூக்காடு போல் காட்சியளிக்கிறது.

**3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

(i) **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் பொருளணியில் இந்த அடியானது இடம் பெற்றுள்ளது. பிடிஏ–1, 2; காலாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2020

(ii) **பொருள் :** மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோர்களால் (உயர்ந்தோர்) வணங்கப்படுகின்ற கதிரவன், ஓசை நிறைந்த கடல் நீரால் சூழப்பட்டுள்ள இந்த உலகத்தின் புற இருளை நீக்குகிறது.

(iii) **விளக்கம் :** மலையில் தோன்றி சான்றோரால் வணங்கப்படுகின்ற, இருளைப் போக்குகின்ற பொருள்கள் இரண்டு உள்ளன. ஒன்று மின்னலைப்போல் ஒளிர்கின்ற கதிரவன். மற்றொன்று பொதிகைமலையில் தோன்றி, வளர்ந்த, மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்குகின்ற தனக்கு நிகரில்லாத தமிழாகும்.

**4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்க தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம் |

| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே. – நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்க தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம் |
|---|---|
| கால மாற்றத்தால் நாம் புதிய சொற்களைக் கண்டறிகிறோம். அவற்றிற்கான பொருள்களையும் அவற்றை நம் மொழிக்கும் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு திருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை உணர்த்தும் வரிகள்தான் இவை. காலச்சூழலுக்கேற்றபடி புதிய சொற்களை உருவாக்குதல் இலக்கிய வளர்ச்சியாகக் கூறப்படுகிறது. | முத்தமிழைப் பாண்டியர்கள் சங்கம் வைத்து வளர்த்தனர். நம் சிந்தனை அத்தமிழின் பழமையை மறவாமல் பண்பாட்டைப் புதுப்பிக்கும் சிந்தனையாக இருக்க வேண்டும். பழமைகளைப் புதுப்பித்துப் போற்ற வேண்டும் என்று சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார். |





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores





## நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.** பிடிஏ–1, 5; செப். 2020

**முன்னுரை:**

தொல்லியல் சான்றுகளால் அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாக உள்ள சங்க இலக்கியம் தமிழ் மொழியின் நடை அழகியல் பரிமாணங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

**மொழிசார் கலை:**

இலக்கியத்தையும் மொழியையும் ஒன்றாக சேர்த்துக் கூறுகின்ற தொல்காப்பியம் அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்றது. உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுகின்றன. இலக்கியம் என்ற மொழிசார் கலையானது மொழியின் தனித்துவமான பண்புகளைத் தனதாக்கிக் கொள்ளும் தன்மை கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் எனப்படுகிறது. இதனால் மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக மாறுகிறது.

**நடையியல் :**

ஒலிக்கோலங்கள், சொற்புலம், தொடரியல் போக்குகள், ஆகியவை நடையியல் கூறுகளாக அமைந்துள்ளன.

**ஒலிக்கோலங்கள் :**

மொழி சார்ந்த கவிதைகள், ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொண்டு பிறக்கின்றன. இது ஒலிப்பின்னல் எனப்படுகிறது. **(எ.கா)**

(i) மெல்லின, இடையின மெய்களைவிட வல்லின மெய்கள் அதிகமாக வருவது.
(ii) உயிர் நெடிலின் வருகை அதிகரிப்பது.
(iii) சில ஒலிகளும் சில சொற்களும் மீண்டும் மீண்டும் அமைவது.
(iv) இவற்றுடன் சொல் விளையாட்டுகளும் சேர்ந்து வருவது.

**சொற்புலம் :**

உணர்வும் பொருளும்; கலையும் பண்பாடும்; வரலாறும் அரசியலும் சொற்புலத்தில் பொதிந்து கிடக்கின்றன.

**சொற்புலத்தில் வருவன :**

(i) ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.
(ii) பல பொருள்கள் குறித்த ஒரு சொல்
(iii) பலதுறைகள், பல சூழல்கள் மற்றும் பல புனைவுகளுக்கு உரியனவாய் வருதல்
(iv) உணர்வும் தெளிவும் கொண்டதாக வருதல்.

**தொடரியல் போக்குகள்:**

கவிதையைக் கூறுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் ஏற்படும் உணர்வுகளுக்கு ஏற்ப தொடர்கள் இயங்குகின்றன. உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு ஆகியவற்றில் எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிற அமைப்பு + பயனிலை என்று தொடரமைப்பு இருக்கும். ஆனால் சங்க இலக்கியங்களில் இவை பாடலின் இறுதியில் பிறழ்ந்து காணப்படுகின்றன. இந்தப் பிறழ்வுநிலை **மறுதலைத் தொடர்** எனப்படுகிறது.

**முடிவுரை:**

நடையியல் என்பது, கவிதை வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்து அமைகின்றது. இதற்கு முதன்மை ஆதாரமாக சங்க இலக்கியம் அமைந்துள்ளது.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**முன்னுரை:**

பாரதியின் கடிதங்கள் அனைத்தும் நம்மிடம் நேரில் பேசுவது போல இருப்பது அவரது நடையழகின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும். பரலி சு. நெல்லையப்பருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

**மொழிப்பற்று :**

பிறமொழிகளை அறிந்து கொண்டு, அம்மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளில் உள்ள புதுமைகளைத் தமிழ்மொழியில் புகுத்த வேண்டும்.

புதிய செய்தி, புதிய யோசனை, புதிய உண்மை, புதிய இன்பம் ஆகியவற்றை தமிழ் மொழியில் கொண்டு வருவதன் மூலம் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்து அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும்.

சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூகோளம், விண்வெளி, இயற்கை பற்றிய ஆயிரக்கணக்கான நூல்கள் தமிழ்நாட்டில் பெருகிட வேண்டும்.

**சமூகப்பற்று :**

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள். அவற்றில் ஒன்றிற்கொன்று தாழ்வில்லை. பெண்ணை இழிவு செய்பவன் தன் கண்ணைத் தானே குத்திக் கொள்வதற்குச் சமமாகும். கல்வியறிவை பெறவிடாமல் பெண்ணை வீட்டிலே அடைத்து வைப்பவன் தன் கண்ணை மூடிக் கொள்வதற்குச் சமமமாகும். இந்தச் சமூகத்தில் தொழில்கள், வணிகம், இயந்திரங்கள் யாவும் பெருக வேண்டும்.



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**முடிவுரை:**

பாரதியார், இலக்கியத் தரத்துடனும் பொதுநலப் பற்றுடனும் மொழிப்பற்றுடனும் கடிதங்களை எழுதியுள்ளமை குறித்து இக்கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

இவ்வுலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின. அவற்றுள் பல அழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழ்மொழி பல ஊழிக்காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது. அத்தகு பெருமைமிக்க தமிழ் மொழியினை, அதன் பெருமையைப் பேசாத கவிஞர்கள் இல்லை எனக் கூறலாம். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழின் பெருமைகளாகக் கூறியவற்றை இங்குக் காண்போம்.

**கவிஞர்களுக்குத் துணையாய் விளங்கும் தமிழ் :**

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைநேரத்தில் மலையின் உச்சியில் சென்று மறைகின்ற காட்சியானது, செந்நிறப் பூக்காடு ஆகாயம் முழுமையும் நிறைந்திருப்பது போல் உள்ளது.

உழைத்துச் சிவந்த தொழிலாளர்களின் கைகள், சிவந்த நிறமுடைய மாலை நேரத்து வானம் போல் உள்ளது. தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது பூத்திருக்கும் வியர்வைத் துளிகள் முத்துக்கள் போன்று உள்ளன. இக்காட்சிகளை எல்லாம் வியந்து பாடுவதற்கு செந்தமிழாகிய உன்னைவிட்டால் வேறு பொருத்தமான துணை உண்டோ? கூறிடுவாயாக! எனக் கேட்கிறார் கவிஞர்.

**தமிழின் பெருமைகள் :**

கவிஞர்களின் உள்ளத்திலே பொங்கிப் பெருகி வரும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக விளங்கும் முத்தமிழே! தொன்மைக் காலத்தில் பாண்டியரின் சங்கத்தில் அரசியாக, அரியணையில் வீற்றிருந்தாய்! பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்து அறம் வளர்த்தாய்!

**தமிழ்த்தாயே வருக!:**

மீண்டும் அந்தப் பொற்காலம் அமைவதற்கு தமிழ்க்குயிலாக மாறி மெய்சிலிர்க்க இன்னிசை பாடி வருக! தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளியே வரும் சிங்கம் போன்று உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை உடைத்து எறிந்து விட்டு, பொதிகைமலையில் வளர்ந்த தென்தமிழே வருக!

**முடிவுரை:**

கால மாற்றங்களுக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்வதுடன், தன்னுடைய பழம்பெருமைகளையும் இழந்துவிடாமல் தமிழ் மொழி தரணியெங்கும் புகழ்மணம் வீச வேண்டும் என்பதைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

**4. 'சொல்லோவியங்கள்(கவிதை)' என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**




## சொல்லோவியங்கள் (கவிதை)

### நூல் வெளியீட்டு விழா

நாள் : 12-06-2020 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.50 மணி

இடம் : கபிலன் நவீன இலக்கிய அகம்,
மெட்ரிக் மேனிலைப் பள்ளி சென்னை - 42

| | |
|---|---|
| நிகழ்ச்சி நடத்துநர் | : கவிஞர் சி.கபிலன் |
| மங்கல விளக்கேற்றல் | : திருமதி, செந்தமிழ்ச்செல்வி |
| வரவேற்புரை | : நாட்டியக் கலாநிதி. புவனா தமிழரசன் |
| நிகழ்வரங்கு | : புத்தக ஆய்வும் அறிமுகமும் கவிஞர். முத்தரசன் அவர்கள் கவிஞர் அறிவழகன் அவர்கள் |
| ஏற்புரை | : கவிஞர் சு. கபிலன் அவர்கள் |
| அறிமுக உரையும் வெளியீட்டு உரையும் | : திரு.மு.சௌந்தர பாண்டியன் அவர்கள் (புத்தக வெளியீடு) |
| சிறப்புரை | : கவிஞர் தென்றல் தென்னவன் |
| நன்றியுரை | : திருமதி. இராசாத்தி தென்றல் தென்னவன் |

அனைவரும் வருக! (இரவு 8.30க்கு நிறைவு பெறும்)

**நன்றியுரை:**

அனைவருக்கும் மாலை வணக்கம். இத்தருணம் நன்றி தெரிவிக்கும் தருணம். இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்புரையாற்றி எங்கள் செவிகளுக்கு விருந்தளித்த சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா சிறப்பாக நடைபெற எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எங்கள் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கு நன்றி கூறுவதில் ஆனந்தமடைகிறேன். பெற்றோர்களுக்கும், என் சகோதர சகோதரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நவில்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அலுவலக பணியாளர்களுக்கும் ஒலி, ஒளி அமைத்துக் கொடுத்தவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



# மொழியை ஆள்வோம்

## தமிழாக்கம் தருக.

பிடிஏ–2, 3; காலாண்டுத் தேர்வு 2019

1. **Learning is a treasure that will follow its owner everywhere.**

   கல்விச் செல்வம், கற்றோருக்கு செல்கின்ற இடமெல்லாம் சிறப்பைத் தரும்.

2. **A new language is a new life.**

   புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது.

3. **If you want people to understand you, speak their language.**

   உங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அவர்களது மொழியிலேயே உரையாட வேண்டும்.

4. **Knowledge of languages is the doorway to wisdom.**

   பன்மொழி அறிவானது, ஞானத்தின் நுழைவாயில் ஆகும்.

5. **The limits of my language are the limits of my world.**

   என்னுடைய மொழியின் எல்லையே என்னுடைய உலகத்தின் எல்லை ஆகும்.

## இலக்கிய நயம் பாராட்டுக.

பிடிஏ–5, 6

முச்சங்கங் கூட்டி
    முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
    அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
    சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங் ளெல்லாம்
    அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

**திரண்ட கருத்து :**

தமிழ்த்தாயானவள், முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களை அமைத்து, அறிவில் சிறந்த புலவர்களைக் கொண்டு, அந்தச் சங்கத்தில் அளவிட இயலாத பொருட்சுவை நிறைந்த சொற்களால் ஆன கவிதைகளை இயற்றச் செய்து, அற்புதங்களை நிகழ்த்திய பெருமாட்டி ஆவாள்.

**மையக் கருத்து :**

முச்சங்கத்தின் வாயிலாக, புலவர்கள் பொருட்சுவையும் சொற்சுவையும் நிறைந்த பாடல்களை இயற்றுவதற்குக் காரணமாக இருந்தவள் தமிழன்னை.

**நயங்கள்:**

**மோனைத் தொடை :** அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவருவது மோனைத் தொடையாகும்.

முச்சங்கம் – முதுபுலவர் ; அச்சங்க – அளப்பரிய ; அற்புதங்கள் – அமைத்த

**எதுகைத் தொடை :** அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது மோனைத் தொடையாகும்.

முச்சங்கம் – அச்சங்கம் ; சொற்சங்கம் – அற்புதங்கள்

**இயைபுத் தொடை :** அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றிவருவது இயைபுத் தொடை ஆகும். அடிதோறும் 'கூட்டி' என்ற சொல் இறுதியாக அமைந்துள்ளது.

**அணிநயம் :** இப்பாடலில் **உயர்வு நவிற்சி அணி** பயின்று வந்துள்ளது.

**விளக்கம் :** சங்கப்புலவர்கள் பொருட்சுவையும் சொற்சுவையும் ஒருங்கே அமையப் பெற்ற செய்யுள்களை இயற்றியது இயல்பான ஒன்றாகும். தமிழன்னை, புலவர்களைச் சங்கத்திற்கு வருவித்து செய்யுள்களை இயற்ற வைத்தாள் என்று உயர்வுபட கூறியமையால் இது **உயர்வு நவிற்சி அணி** ஆயிற்று.

இயல் 1



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**- மொழி வரலாறு (மு.வரதராசனார்)**

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரிய கலை எது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
4. மக்களுக்கும் மொழிக்கும் உள்ள உறவுகள் யாவை?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

**(தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல)**

1. **தாமரை இலை நீர்போல : (எதிலும் ஒட்டாத நிலை)**
இவ்வுலக வாழ்க்கையின் மீது **தாமரை இலை நீர்போல** முனிவர்கள் வாழ்ந்தனர்.

2. **கிணற்றுத்தவளைபோல: (அறியாமையில் வாழ்வது)**
**கிணற்றுத் தவளை போல்** உலக நடப்புகளை அறியாமல் வாழ்பவர் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கடினம்.

3. **எலியும் பூனையும்போல: (தீராப் பகை)** அ.மா.வி 2019; செப். 2020
**எலியும் பூனையும் போல** சாதி மத வேறுபாடுகளால் மக்கள் பகைமை உணர்வோடு வாழ்ந்தால் சமூகத்தின் முன்னேற்றம் தடைபடும்.

4. **அச்சாணி இல்லாத தேர்போல: (ஆதரவற்ற நிலை)** மார்ச் 2020
சான்றோரின் வழிகாட்டுதல் இல்லை என்றால் **அச்சாணி இல்லாத தேர்போல** மக்கள் நல்வழியில் செல்ல இயலாமல் துன்புறுவர்.

5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல: (தெளிவாக அறிதல்)** செப். 2020
தமிழாசிரியர் கற்பித்த இலக்கணம் மாணவர்களுக்கு **உள்ளங்கை நெல்லிக்கனி போல** தெளிவாக விளங்கியது.

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்**

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்த பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.

**விடை:**

**முன்னுரை :**

கல்வி என்பது நம் அறியாமையைப் போக்கும் கருவி ஆகும். இதன் இன்றியமையாமையை உணர்த்துவதற்கு நம் தமிழ்ச் சான்றோர்கள் ‘இளமையில் கல்’ என்றும் ‘கற்க கசடற’ என்றும் கூறியுள்ளனர். அப்படிப்பட்ட கல்வியை நாம் நம் தாய்மொழியில் கற்பது சிறந்தது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

உயிரினும் ஓம்பப் படும்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores


**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

தாய்மொழியில் கல்வி கற்பதனால் மாணவர்களால் உண்மையான அறிவைப் பெற முடிகிறது. சிறப்பாகச் சிந்திக்க முடிகிறது. அவர்கள் கற்றதை சமுதாயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. தாய்மொழியில் கற்பதால் இவர்களுக்குக் கற்கும் திறன் நாளடைவில் வளர்ச்சி பெறுகிறது. இம்முறையால் மாணவர்கள் தன்னம்பிக்கை பெறுகிறார்கள். எளிதில் உரையாடும் ஆற்றலும் சிறந்த பேச்சாற்றலும் வளர்கிறது. தாய்மொழியில் கற்றவர்கள் சிறந்த படைப்பாளராக இயலும். தாய்மொழியை நன்கு அறிந்த மாணவர்களால் பிற மொழியை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். பிறமொழியைச் சரளமாகப் பேச இயலும். தாய்மொழியை அறியாமல் பிற மொழியில் புலமை பெற விரும்புவது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படும்' கதைதான்.

**தாய்மொழிச் சிந்தனை :**

தாய்மொழிக் கல்வியே சிந்தனைத் திறனை, ஆராய்ச்சிப் புலமையை வளர்க்கும்; பன்மடங்கு விரிவாக்கும். மொழிக்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. குழந்தையின் மூளைக்கு மற்ற மொழிகளைவிட தாய்மொழியை உள்வாங்கிக் கொள்ளும் திறன் அதிகம். ஏனென்றால் குழந்தை தாயின் கருவறைக்குள்ளேயே தனது மொழியைத் தெரிந்து கொள்கிறது.

தாய்மொழியில் கல்வி கற்பதன் மூலம் குழந்தைகள், கற்பதைத் தாங்கள் பேசுவதுடனும் சமுதாயத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அதனால் அவர்கள் ஒரு விஷயத்தை நோக்கும் விதம் வேறுமொழியில் கற்பவர்களை விட மாறுபடுகிறது. இவை கற்கும் திறனை நாளடைவில் அதிகரிக்கச் செய்கிறது.

**அறிஞர்களின் பார்வை :**

"தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டு வர முடியும்" என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறியுள்ளார். ஒருவனது இதயத்தைத் தொடுவதற்கு அவனது தாய்மொழியில் பேசவேண்டும் என்றும் பொதுமொழியில் பேசினால் அவனது எண்ணத்தை மட்டுமே அறிய முடியும் என்றும் நெல்சன் மண்டேலா தாய்மொழிக் கல்வி பற்றிக் கூறியுள்ளார். யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு தாய்மொழிக் கல்வி பயிலும் குழந்தைகளே மிகவும் ஆழ்ந்து கல்வி கற்கின்றனர் எனக் கூறியுள்ளது. இது அனைத்து வயதினருக்கும் அளிக்கப்படுகிற கல்விக்கும் பொருந்தும். 'பள்ளிகளில் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க வேண்டும்' என்பது மகாத்மா காந்தியடிகளின் கருத்து.

**கற்கும் திறன் – பயன் :**

மாணவர்களின் ஆற்றலை தாய்மொழிக் கல்வி வளப்படுத்துகிறது. அவர்களின் படைப்பாற்றலை அதிகப்படுத்துகிறது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். எளிதாகப் பாடங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால் ஆசிரியர்கள் எளிதில் கலந்துரையாடலில் ஈடுபட முடியும். இதனால் மாணவர்களின் பங்களிப்பு உள்ள ஒரு கல்வி முறை உருவாகிறது.

**இன்றைய நிலை :**

தாய்மொழிக் கல்வி கற்றால் முன்னேற முடியாது ஆங்கிலவழி கல்வி மட்டுமே உயர்ந்தது என்ற கருத்து பெற்றோர்களிடையே நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன் ஆகியோர் தமிழ் வழியில் (தாய்மொழியில்) கல்வி கற்றவர்கள்தாம். கல்வியும் மொழியும் நமது இரு கண்கள் ஆகும்.

**முடிவுரை :**

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்றார் பாரதிதாசன். அப்புகழுக்கெல்லாம் சொந்தமான தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் தாய்மொழியில் கல்வி பயின்று மொழியைச் சிறப்பிப்போம்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. **நகமும் சதையும் போல :** மார்ச் 2020

கமலாவும் கீதாவும், **நகமும் சதையும் போல** இணை பிரியாத தோழிகளாக இருந்தார்கள்.




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



# மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக.

| | |
|---|---|
|  | ஓர் இனத்தின் வரலாறு தமிழன்.<br>உளி வைத்த இடங்களெல்லாம் சிலைகளும் ஓவியங்களும்.<br>ஆதியில் எண்ணங்களைத் தெரிவிக்க சைகைகளைக் காட்டினான்.<br>பிறகு குரலைப் பயன்படுத்தினான், சொற்களைக் கற்றுக்கொண்டான்<br>தலைமுறைக்குத் தெரிவிக்க எண்ணி பாறைகளில் குறியீடாக்கினான்<br>எழுத்து வடிவங்களை கல்வெட்டுகளில் பொறித்தான்.<br>உடைகளில்லா காலத்திலேயே உளியால் செதுக்கியவன் தமிழன்<br>கலைகளின் தலைமகன் தமிழன்டா.. |

## அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

| | |
|---|---|
| குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்<br>தாயின் குரலில் உயிரின் ஒலி. | **விடை:**<br>உயிரின் ஒலி அது உள்ளத்தின் ஒலி<br>உள்ளத்தின் ஒலி உண்மை பேசும்<br>உண்மையைப் பேசி குழந்தையை வளர்க்கும். |

## குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

எ.கா. கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **விடை:** **மறைமலை அடிகள்**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். **விடை:** **தமிழ்ஒளி**
3. சிறுகதை ஆசிரியர் ; முதல் பாதி நவீனம். **விடை:** **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். **விடை:** **கோதை**

## செய்து கற்போம்.

1. **தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் ஏதேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் தொகுப்பிலிருந்து...**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதம் :**

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிசினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே, நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்து வந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்து கொள்வதில் முற்பட்டிருக்கிறேன். எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்கு தடையற்ற நிலையில் இருந்து வந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன், ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவாள் வேண்டி, “உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!” என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.

“தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்.”

– என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.




இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ் மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை!
பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக!
வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968

அண்ணன்,



**மகளுக்கு நேருவின் கடிதம்:**

இந்திரா பிரியதர்ஷினிக்கு அவருடைய தந்தை ஜவஹர்லால் நேரு எழுதியுள்ள கடிதத் தொகுப்பைக் கொண்ட ‘உலக வரலாறு’ (Glimpses of World History) என்ற நூலில் தந்தைக்கும் மகளுக்கும் இடையே ஆன ஒரு பிணைப்பினையும், பாசத்தையும் உணரமுடியும்.

**கடைசி கடிதம் 9.8.1933**

மலையளவு எண்ணிக்கையில் கடிதங்கள் எழுதிவிட்டேன். அப்பப்பா. எவ்வளவு உள்நாட்டுத் தாளில் எவ்வளவு உள்நாட்டு இங்க் பயன்படுத்தியுள்ளேன். அவையனைத்தும் பயனுள்ளதா என நினைந்து வியக்கிறேன்.

இந்த அனைத்து தாள்களும், இங்கும் உனக்கு ஆர்வத்தைத் தூண்டும் செய்தியைத் தருகின்றதா? நீ ‘ஆம்’ என்றுதான் கூறுவாய். ஏனென்றால் வேறுவிதமாக மறுமொழி கூறினால் நான் சங்கடப்படுவேன் என்று நினைப்பாய். அவ்வாறான ஒரு நிலையை எடுக்கும்போது பாரபட்சமாகவே இருப்பாய்..........

நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். உனக்காக எழுதுகிறேன். உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். காலங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன........... நான் இக்கடிதங்களில் சொன்னதே இறுதியானது என நீ எடுத்துக்கொள்ளக்கூடாது...

இக்கடிதங்கள் அனைத்தும் மெல்லிய நூலால் இணைக்கப்பட்ட ஓர் அழகான வடிவமே... சில நூற்றாண்டுகளை விட்டுவிட்டேன். சில முக்கியமான நிகழ்வுகளையும் விட்டுவிட்டேன். அதே நேரத்தில் எனக்கு ஆர்வமானவை பற்றி அதிகம் எழுதியுள்ளேன்....

www.surabooks.com



orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



ஒரு மேல் தோற்றமாகத் தந்துள்ளேன். இது வரலாறன்று. இவை நமது கடந்த காலப் பதிவுகள். வரலாறு உனக்கு ஆர்வமூட்டினால் வரலாற்றின் அழகை நீ உணர்ந்தால் பல நூல்களின் துணையோடு கடந்த காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.....

நூல்களைப் படிப்பது மட்டுமே உனக்கு உதவப்போவதில்லை. கடந்த காலத்தைக் கருணையோடும் புரிதலோடும் நோக்கவேண்டும். பல்லாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு நபரைப் பற்றி அறிந்துகொள்ள அவருடைய சூழலையும், அவர் வாழ்ந்த நிலையையும், அவர் மனதில் இருந்த எண்ணங்களையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்...

கவிஞர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் நான் உனக்காக பல மேற்கோள்களைச் சுட்டியுள்ளேன். இன்னுமொரு மேற்கோளுடன் இதனை முடிப்பேன். அது தாகூர் எழுதிய கீதாஞ்சலியிலிருந்து...... 'மனமானது எங்கு பயமின்றி இருக்கிறதோ.....'

நம் பணி நிறைவுற்றது. இந்தக் கடைசி கடிதமும் முடிந்தது. கடைசிக்கடிதம்? உண்மையில் இல்லை. இன்னும் பல கடிதங்களை எழுதுவேன். இந்த வரிசைக் கடிதம் முடிகிறது.......... (ப.954)

**மு. வரதராசனார் தம்பிக்கு எழுதிய கடிதம் :**

அன்புள்ள எழில்,

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. அன்னைக்கு எழுதிய கடிதங்களை அண்ணன் எப்படிப் பார்த்தான் என்று நீ எண்ணி வியப்பு அடையலாம். உன் கடிதங்கள் அன்னை மட்டும் அல்லாமல் அண்ணனும் படிக்க வேண்டிய கடிதங்கள்தான்.

நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள்; மாய்ந்துவருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராதவகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகள் காணலாம். தமிழ்நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லையா? ஜெர்மனி, ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் காணவில்லையா?

நல்ல மருமகளாக வந்து வாழத் தொடங்கிக் குடும்பத்தாரின் இன்னலைப் பொறுக்க முடியாமல் தற்கொலையாலோ மனவேதனையாலோ மாண்ட கதைகளை ஊர்களில் கேட்டதில்லையா? மகனையும் மருமகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்து வல்லமை பெற்ற மாமியார், நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்.

தமிழ்மொழி நல்ல மொழி தான்; ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமோ? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

தம்பி! இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என் கருத்தில் எந்தப் பகுதியாவது உனக்குத் தெளிவில்லாமல் இருந்தால் அதைக் குறித்து எழுது; தெளிவுபடுத்துவேன். ஏதாவது உனக்கு உடன்பாடு இல்லாமல் கருத்து வேறுபாடாக இருந்தால் எண்ணிப்பார்; அல்லது விட்டுவிடு. நான் என்ன செய்வேன்? நீ எவ்வளவு உண்மையாக உணர்கிறாயோ அவ்வளவு உண்மையாகவே நானும் உணர்கிறேன். இந்தத் தமிழகத்தில் நாம் இருவராவது ஒன்றுபட முடியாதா, பார்ப்போம்.

உன் அன்புள்ள,
மு.வரதராசனார்.





orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## நிற்க அதற்குத் தக.

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| எ.கா. பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாமல் எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | **தவறு.** கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் கழிவறைகளில் துப்பலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | **தவறு.** குப்பைத் தொட்டியில் போடலாம் அல்லது சேர்த்து வைத்துப் பழைய புத்தகங்களை வாங்குவர்களிடம் கொடுக்கலாம். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | **தவறு.** காகிதங்களில் படம் வரையும் பயிற்சியை மேற்கொள்ளலாம். |



### படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

| | | | |
|---|---|---|---|
| 1. Subscription | - உறுப்பினர் கட்டணம் | 4. Archive | - ஆவணம் |
| 2. Fiction | - புனைவு | 5. Manuscript | - கையெழுத்துப் பிரதி |
| 3. Biography | - வாழ்க்கை வரலாறு | 6. Bibliography | - நூல் நிரல் |

## அறிவை விரிவு செய்

1. பாரதியின் கடிதங்கள் – ரா.அ. பத்மநாபன்
2. இலக்கண உலகில் புதிய பார்வை – டாக்டர் பொற்கோ
3. தமிழ் அழகியல் – தி.சு. நடராசன்
4. பாரதி கட்டுரைகள்
5. பாரதி கதைகள்
6. காட்டுவாத்து – ந.பிச்சமூர்த்தி
7. நெல்லூர் அரிசி – அகிலன்
8. சுவரொட்டிகள் – ந.முத்துசாமி

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. **Archive – என்பதற்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க.** செப். 2020

அ) ஆவணம் ஆ) பிரதி
இ) புனைவு ஈ) நூல்நிரல்

**விடை: அ) ஆவணம்**

☆ ☆ ☆



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com